மலர்-1 இதழ்-22 ஜுலை 16-31 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



## வாழ்க்கையை இனிமையாக்கும் பித்ரு பூஜை

# அற்புதமான ஆடிமாதம்

# நரசிம்மர்

## அற்புதமான சிறு தகவல்கள்

- நரசிம்மரைத் தொடர்ந்து மனம் ஒன்றி வழிபட்டு வந்தால் எதிரிகளை வெல்லும் பலம் கிடைக்கும்.
- நரசிம்மரை உபாசனா தெய்வமாக ஏற்றுக் கொள்பவர்களுக்கு 8 திசைகளிலும் புகழ் கிடைக்கும்.
- நரசிம்ம அவதாரம் காரணமாகவே மறந்து போன வேதங்களும், பொருள் புரியாத மொழிகளும், விடுபட்ட யாகங்களும் சாதாரண நிலை நீங்கி, உயர் நிலையைப் பெற்றன.
- நூற்றி எட்டு திவ்ய தேசங்களில் ``சிங்கவேள்குன்றம்'' என்பதும் ஒன்று. இத்தலம் மீது பாடப்பட்டுள்ள பதிகங்கள், பாசுரங்கள், செய்திகள் அனைத்தும் நரசிம்ம அவதாரம் மட்டுமே இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.
- நரசிம்ம அவதாரத்தின் முதல் குறிப்பு பரிபாடலில் காணப்படுகிறது.
- நரசிம்மருக்கு நரசிங்கம், சிங்கபிரான், அரி முகத்து அச்சுதன், சீயம், நரம் கலந்த சிங்கம், அரி, ஆளரி ஆகிய பெயர்களும் உண்டு.
- திருமாலின் பத்து அவதாரங்களில் பரசு ராமன், பலராமன் இருவரும் கோபத்தின் வடிவமாக திகழ்பவர்கள். இதனால் அந்த இரு அவதாரங்களும் வைணவர்களால் அதிகம் வணங்கப்பட வில்லை. ஆனால் நரசிம்ம அவதாரம் உக்கிரமானதாக கருதப் பட்டாலும் பக்தர்கள் அவரை விரும்பி வணங்குகிறார்கள்.
- நரசிம்ம அவதாரம் பற்றி முதன் முதலில் முழுமையாக சொன்னவர் கம்பர்தான்.
- திருத்தக்கதேவர் தனது சீவக சிந்தா மணியில், ``இரணியன்பட்ட தெம்மிறை எய்தினான்'' என்று நரசிம்ம அவதாரம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.
- இரணியனின் ரத்தத்தை குடித்ததால் சீற்றம் பெற்ற நரசிம்மரின் ரத்தத்தை சிவன் சரபப்பறவையாக வந்து குடித்தார். இதன்பிறகே நரசிம்மரின் சீற்றம் தணிந்ததாக சொல்வார்கள். இந்த தகவல் அபிதான சிந்தாமணியில் கூறப் பட்டுள்ளது.
- சோளிங்கரின் உண்மையான பெயர் சோழசிங்கபுரம். நரசிம்மரின் பெருமையை பெயரிலேயே கூறும் இந்த ஊர் பெயரை ஆங்கிலேயர்கள் சரியாக உச்சரிக்க இயலாமல், அது சோளிங்கர் என்றாகிப் போனது.
- சிங்கபெருமாள்கோவில், மட்டப்பள்ளி, யாதகிரி கட்டா, மங்கள கிரி ஆகிய தலங்களில் நரசிம்மர் சன்ன திகள் குகைக் கோவிலாக உள்ளன.
- கீழ் அகோபிலத்தில் நாம் கொடுக்கும் பானகத்தை நை வேந்தியதில் பாதியை நரசிம்மர் ஏற்றுக் கொண்டு மீதியை அவர் வாய் வழியே வழிய விட்டு நமக்கு பிரசாதமாக தருவதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.
- நங்கநல்லூர் நரசிம்மர் ஆலயம் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்திய தொல்பொருள் ஆய் வாளர்கள் இதை 1974ம் ஆண்டு கண்டுபிடித்து வெளிப்படுத்தினார்கள்.
- சிவனை கடவுளாக ஏற்ற ஆதிசங்கரர், ஸ்ரீலட்சுமி நரசிம் மரைப் போற்றித் துதித்ததும் அவருக்கு உடனே நரசிம்மர் காட்சி கொடுத்தார்.
- நரசிம்ம அவதாரத்தை எப்போது படித்தாலும் சரி, படித்து முடித்ததும் பானகம், பழவகைகள், இளநீரை நிவேதனமாக படைத்து வணங்குதல் வேண்டும்.
- “எல்லா பொருட்கள் உள்ளேயும் நான் இருக்கிறேன்'' என்பதை உணர்த்தவே பகவான், நரசிம்ம அவதாரம் எடுத்தார். எனவே நரசிம்மரை எங்கும் தொழலாம்.
- திருமாலின் அவதாரங்களில் நரசிம்ம அவதா ரமே திடீரென தோன்றிய அவதாரமாகும்.
- நரசிம்மரின் வலது கண்ணில் சூரியனும், இடது கண்ணில் சந்திர னும், இடையில் புருவ மத்தியில் அக்னியும் உள்ளனர்.
- நரசிம்மன் என்றால் ஒளிப் பிழம்பு என்று அர்த்தம்.
- நரசிம்மனின் தேஜஸ் காயத்ரி மந்திரத்துக் குள்ளே இருப்பதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.
- நரசிம்ம அவதாரம் பற்றி ஜெர்மன் அறி ஞர் மாக்ஸ்முல்லர் கூறுகை யில், `An Electric Phenomenon' என்று கூறி யுள்ளார்.
- இரண்ய கசிபுவை வதம் செய்த போது எழுந்த நரசிம்மரின் சிம்ம கர்ஜனை 7 உலகங்களையும் கடந்து சென்றதாக குறிப் புகள் உள்ளது.
- மகாலட்சுமிக்கு பத்ரா என்றும் ஒரு பெயர் உண்டு. இத னால் நரசிம்மனை பத்ரன் என்றும் சொல்வார்கள். பத்ரன் என்றால் மங்களமூர்த்தி என்று அர்த்தம்.
- பகவான் பல அவதாரங்களை எடுத்தாலும், அவனுடைய நாமங்கள் இறுதியில் நரசிம்ம ரிடத்திலேதான் போய் முடியும் என்று கருதப் படுகிறது.
- சகஸ்ரநாமத்தில் முதன் முதலாக நரசிம்ம அவதாரம்தான் இடம் பெற்றுள்ளது.
- நரசிம்ம அவதாரத்தை எதைக் கொண்டும் அளவிட முடியாது என்ற சிறப்பு உண்டு.
- ராமாயணம், மகாபாரதம், பாகவதம், 18 புராணங்கள், உப புராணங்கள் அனைத்திலும் நரசிம்மருடைய சிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.
- நரசிம்ம மந்திரம் ஒரு எழுத்தில் தொடங்கி, ஒரு லட்சத்து நூற்றி முப்பத்திரண்டு என்று விரிந்து கொண்டே போய் பலன் தரக்கூடியது.
- நரசிம்மர் எங்கெல்லாம் அருள் தருகிறாரோ, அங்கெல்லாம் ஆஞ்சநேயர் நிச்சயம் இருப் பார்.
- வேதாத்ரியில் உள்ள யோக நரசிம்மர் இடுப்பில் கத்தி வைத்துக் கொண்டிருக்கிறார். அறுவை சிகிச்சைக்கு செல்பவர்கள் இவரை வணங்கி சென்றால் நல்ல பலன் கிடைக்கும்.
- வாடபல்லி தலத்தில் உள்ள நரசிம்மரின் மூக்குக்கு எதிரில் ஒரு தீபம் ஏற்றப்படும். அந்த தீபம் காற்றில் அசைவது போல அசையும், நரசிம்மரின் மூச்சுக் காற்று பட்டு அந்த தீபம் அசைவதாகக் கருதப்படுகிறது. அதே சமயத்தில் நரசிம்மரின் கால் பகுதியில் ஏற்றப்படும் தீபம் ஆடாமல் அசையாமல் நின்று எரியும்.
- மட்டபல்லியில் உள்ள நரசிம்மரை வணங்கி னால் மன சஞ்சலங்கள் நீங்கும்.
- நரசிம்மரை வழிபடும் போது “ஸ்ரீநரசிம்ஹாய நம'' என்று சொல்லி ஒரு பூவைப் போட்டு வழிபட்டாலே எல்லா வித்தையும் கற்ற பலன் உண்டாகும்.
- “அடித்த கை பிடித்த பெருமாள்'' என்றொரு பெயரும் நரசிம்மருக்கு உண்டு. அதாவது பக்தர்கள் உரிமையோடு அடித்து கேட்ட மறு வினாடியே உதவுபவன் என்று இதற்கு பொருள்.

36. நரசிம்மனிடம் பிரகலாதன் போல நாம் பக்தி கொண்டிருக்க வேண்டும். அத்தகைய பக்தி இருந்தால் அதைகொடு, இதை கொடு என்று கேட்க வேண்டியதே இல்லை.




ஆன்மிகமலர் மெயில் புக்

# சிவனின் பித்தத்தை தெளிவித்த மேல்மலையனூர் அங்காளம்மன்



மேல்மலையனூரில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அங்காளபரமேஸ்வரி அம்மன் ஆலயம் அற்புதங்களும், அதிசயங்களும் நிறைந்தது. இந்த ஆலயத்தில் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு நலமும், வளமும் வழங்கி வரும் ஆற்றல் மிக்க சக்தியாக அன்னை அங்காளபரமேஸ்வரி விளங்குகிறாள்.

மயானத்தில் வீற்றிருந்து பக்தர்களை பிடித்திருக்கும் பேய், பிசாசு மற்றும் பில்லி சூனியம் ஆகியவற்றை முறியடித்து அருளாட்சி புரிந்து வரும் அங்காளபரமேஸ்வரியின் வரலாறு சிவனோடு தொடர்புடையது.

ஆதிகாலத்தில் சிவபெருமானுக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அந்த தோஷத்தை நீக்கும் பொருட்டு தோன்றியவர் அங்காளம்மன். விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் அங்காளபரமேஸ்வரி அம்மன் கோவிலில் மகாசிவராத்திரி அன்று சிவனை பிடித்து இருந்த பிரம்மஹத்தி தோஷம் விலகியதாக ஐதீகம்.

இதற்கு ஒருபுராணக்கதை உண்டு. சிவ பெருமானுக்கு 5 தலைகள் இருப்பதை போல், தனக்கும் 5வது தலை வேண்டும் என்று நினைத்தார் பிரம்மதேவர்.

ஆகவே சிவபெருமானை நோக்கி தவம் இருந்து வரம் கேட்டு பெற்றுக்கொண்டார். இதனால் பிரம்மாவுக்கும் 5 த லை க ள் இருந்தது. ஒருநாள் பிரம்மா கர்வத்துடன் கயிலாயத்துக்கு சென்றார். பிரம்மதேவனை கண்ட பார்வதி, சிவபெருமான் தான் வந்துவிட்டார் என்று நினைத்து அவர் பாதங்களில் விழுந்து வணங்கி பூஜை பொருட்களை சமர்ப்பித்தார்.

பின்னர் பிரம்மாவின் முகத்தை பார்த்து உண்மை நிலையை தெரிந்து கொண்ட பார்வதி ஆத்திரம் அடைந்தாள். பிரம்மாவை நோக்கி உன் ஒரு தலை அழியக்கடவது என்று சாபம் இட்டாள். மேலும் நடந்ததை சிவனிடமும் கூறினாள் பார்வதி. பரமசிவன் தன் சூலாயுதத்தால் பிரம்மாவின் ஒரு தலையை வெட்டினார். ஆனால் வெட்டப்பட்ட இடத்தில் புதிய தலை முளைத்தது. சிவன் தலையை வெட்டுவதும் அந்த இடத்தில் புதிய தலை முளைப்பதுமாக இருந்தது. இந்த புதிரை சிவபெருமானால் புரிந்துகொள்ள முடியவில்லை. பின்னர் வெட்டப்பட்டு கீழே கிடந்த பிரம்மாவின் தலைகளை ஒரு கயிற்றில் கோர்த்துக்கட்டி அதை தன் கழுத்தில் மாலையாக சிவன் அணிந்து கொண்டார்.

அதன்பிறகு பிரம்மனின் தலையை வெட்டி அதை கீழே போடாமல் தன் கையிலேயே வைத்துக்கொண்டார். இப்போது பிரம்மனின் தலை வெட்டப்பட்ட இடத்தில் புதிய தலை முளைப்பது நின்றுவிட்டது.

ஆனால் சிவபெருமானுக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடித்து விட்டது. பிரம்மாவின் ஒரு தலை அழிந்துவிட காரணமாக இருந்த பார்வதியிடம் கோபத்தோடு வந்தாள் பிரம்மாவின் மனைவி சரஸ்வதி. 'பார்வதி! இனி நீ அழகுமிக்க ஆடை களை அணியக் கூடாது. அதற்கு பதிலாக கொக்கு, சிறகு, மயில் தோகைகளை அணிந்து பூமியில் புற்றாக இருக்க வேண்டும்' என்று சாபமிட்டாள். அதன்படி பார்வதிதேவி உருவம் மாறி, திருவண்ணாமலை வழியாக மேல்மலையனூர் வந்து புற்றாக அமர்ந்தாள்.




ஆன்மிகமலர் மெயில் புக்
16-31 ஜூலை 2017 5
www.aanmeegamalar.com

இந்த சூழ்நிலையில் பிரம்மஹத்தி தோஷத்தால் பாதிக்கப்பட்டு வடகயிலாயம் நோக்கி சென்ற சிவன், மேல் மலையனூரில் அங்காளம்மன் 4 ஆயிரம் நோய் கள், பில்லிசூனியம் ஆகியவற்றை தீர்த்து வைப்பதை அறிந்து மேல்மலையனூர் வந்தார். அங்காளம்மன் கோவில் முன்வந்து 'அரகரா! அன்னதான பிச்சை' என்று உரக்க சத்தம் போட்டார்.

இந்த சத்தம் அங்காளம்மன் காதில் விழுந்தது. உடனே அவர் மனம் மகிழ்ந்தார். யாசகம் கேட் கும் கணவருக்கு எதை வழங்குவது என்று யோசித்தார். அப்போது சிவனுக்கு எதை வழங்குவது என்று மகாவிஷ்ணு யோசனை கூறினார். 'அம்பிகையே! உன் கணவருக்கு எது சாப்பிடக் கொடுத்தாலும் அதை அவரது கையில் உள்ள கபாலம் சாப்பிட்டு விடும். ஆதலால் நீ உலகத்தில் உள்ள பயிர் பட்சணங்களை எல்லாம் வரவழைத்து உணவாக சமைக்க வேண்டும்.

பின்பு அதை 3 கவளமாக தயார் செய்ய வேண்டும். இரண்டு கவளத்தை உன் கணவர் கையில் உள்ள கபாலத்தில் போட வேண்டும். 3வது கவளத்தை கபாலத்தில் போடுவதை போல் நடித்து அதை கைதவறி கீழே போடுவதை போல் தரையெங்கும் சிதறிவிட வேண்டும். சாதத்தின் ருசி அறிந்த கபாலம் அதை பொறுக்க பரமசிவன் கையில் இருந்து கீழே இறங்கும். அப்போது நீ பெரிய உருவெடுத்து அதை காலால் நசுக்கிவிடு. அந்த நேரத்தில் உன் கணவரை பிடித்திருந்த பிரம்மஹத்தி தோஷம் விலகி விடும்' என்றார்.

அன்னையும் மிக மகிழ்ந்து திருமால் கூறிய யோசனைப்படி செயல்பட்டார். சாதம் தயாரானது. உடனே அங்காளி, மூத்த பிள்ளை விநாயகரை அழைத்து விஷயத்தை சொல்லி, 'உன் தந்தையை அக்னி குளத்தில் குளித்து வரச்சொல்' என்று கூற, சிவனும் அதன்படி அக்னி குளத்தில் தீர்த்தமாடி கோவிலுக்கு வந்தார். அவருக்கு அங்காளம்மன் பாதபூஜை செய்து பணிவுடன் வரவேற்று உபசரித்தார். பிறகு கவள சாதங்களை எடுத்து வந்து ஒரு கவளத்தை சிவன் கையில் இருக்கும் கபாலத்தில் போட்டார்.

உடனே அதை கபாலம் சாப்பிட்டு விட்டது. 2வது கவளத்தையும் போட அதையும் கபாலம் சாப்பிட்டது. 3வது கவளத்தையும் உண்டு விட கபாலம் காத்திருக்க சாதத்தை தரை முழுவதும் வாரி இறைந்தாள் அங்காளம்மன். சாதத்தின் ருசிக்கு அடிமைப்பட்ட கபாலம், பரமசிவனின் கையில் இருந்து விருட்டென்று கீழே இறங்கி தரையில் சிதறிய அன்னத்தை பொறுக்கியது. அப்போது அங்காள பரமேஸ்வரி அகிலமே நடுங்கும் அளவு, மண்ணுக்கும் விண்ணுக்கும் வளர்ந்து நின்று, மிகுந்த சினத்துடன், அகோரவடிவில் கபாலத்தின் மீது ஓங்கி மிதித்தார். கபாலம் பெரும் கூச்சல் போட்டு,

'நீயார்? என்னை ஏன் மிதித்தாய்?' என்று ஆக்ரோஷத்துடன் கேட்டது.

அதைக்கேட்ட அன்னை, 'கபாலமே! நீ இனி சிவனிடம் போக முடியாது. என் கீழ் தான் இருக்க வேண்டும். உனக்கு தேவையானவற்றை என்னிடம் கேட்டு பெற்றுக் கொள்ளலாம்' என்றாள். அதற்கு கபாலமும் உடன்பட்டது. இந்த நேரத்தில் பரமசிவனை பிடித்திருந்த பிரம்மஹத்தி தோஷம் நீங்கியது. சுயநிலை வரப்பெற்ற பரமசிவன் ஆனந்த நிலை அடையப்பெற்றார்.

சிதம்பரம் சென்று ஆனந்த தாண்டவம் ஆடினார். அப்போதும் அங்காள பரமேஸ்வரியின் சினம் தணியவில்லை. முப்பத்து முக்கோடி தேவர்களும், 40 ஆயிரம் ரிஷிகளும் ஒன்று கூடி அங்காள பரமேஸ்வரியின் கோபத்தை தணிக்க தேர்த்திருவிழா நடத்தினர். அங்காளபரமேஸ்வரி கோபம் தணிந்து சிறிய உருவாக மாறி அந்த ரதத்தில் ஏறி அமர்ந்தார். உருமி மேளம் முழங்க மங்கள நாதம் இசைக்க வாணவேடிக்கை ஜாலம் காட்ட பிரமாண்டமான முறையில் தேர்த்திருவிழா நடைபெற்றது. சிவனுக்கு பிரம்மஹத்தி தோஷம் நீங்கியது மகா சிவராத்திரியன்று தான் என்பதால் இக்கோவிலில் மகாசிவராத்திரியை தொடர்ந்து 10 நாட்கள் பிரம்மோற்சவம் நடத்தப்படுகிறது. அப்போது மயானக்கொள்ளை, தேரோட்டம் நடைபெறும். புத்திசுவாதீனம் இல்லாதவர்கள், பில்லி, சூனியம், செய்வினை கோளாறு, ஏவலால் பாதிக்கப்பட்டவர்கள் கோவிலுக்கு வந்து அக்கினி தீர்த்தத்தில் நீராடி அம்மனை வணங்கி நோய் நீங்கி அவர்கள் நலம் பெறுகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுகாவில் மேல்மலையனூர் அமைந்துள்ளது. செஞ் சியில் இருந்து வடதிசையில் 20 கி.மீட்டர் தூரத்திலும், திருவண்ணாமலையில் இருந்து கிழக்கு திசையில் 30 கி.மீட்டர் தூரத்திலும் மேல்மலையனூர் உள்ளது.

– ச.நாகராஜன், ஆசிரியர்





# இறைவனுக்கு சாத்தும் வஸ்திரம்



தெய்வங்களுக்கு மிருதுவானதும், கெட்டியானதும், சுத்தமானதுமான அழகான அங்கவஸ்திரம் சாத்தினால் அந்த அங்கவஸ்திரத்தில் எவ்வளவு இழை நூல் இருக்கிறதோ அவ்வளவு வருடத்திற்கு சிவலோகத்தில் வாழும் பாக்கியம் பெறலாம் என்று சிவ தருமம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

பட்டு வஸ்திரம் (ஆடை), பஞ்சு நூலால் தயாரிக்கப்பட்ட வஸ்திரங்கள் போன்றவைகளைக் கொண்டே இறைவனை அலங்கரிக்க வேண்டும். ஒருமுறை பயன்படுத்திய வஸ்திரத்தை மறுமுறை உபயோகிப்பதாயின் நீரில் நனைத்து காய வைக்காமல் உபயோகிக்கக்கூடாது. சிலர் சலவை செய்துவந்த வஸ்திரத்தை திரும்பவும் நனைக்காமல் பயன்படுத்துகிறார்கள். அது சாஸ்திரத்திற்கு எதிரானது மட்டுமன்றி சாத்துபவருக்கு கெடுதியையும் கொடுக்கும். மேலும் கிழிந்த, பழைய வஸ்திரம் எலி அல்லது பூச்சி கடித்த வஸ்திரத்தைப் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும்.

முற்பகலில் வெண்மையான வஸ்திரமும் பகலில் சிவப்பு வஸ்திரமும் சாயங்காலத்தில் (மாலையில்) மஞ்சள் வஸ்திரமும் அர்த்தஜாமத்தில் கறுப்பு நீலநிற வஸ்திரமும் அணிவிக்க வேண்டும். விசேட தினங்களில் பலவித நிற வஸ்திரங்களைக் கொண்டு அலங்கரிக்கலாம்.

– ஸ்ரீபதி

# ரத்தின அலங்கார பலன்கள்




இறைவனுக்கு எல்லாவித ரத்தினங்களை தினந்தோறும் சாத்தி அலங்கரித்தாலும் ஒவ்வொரு தினமும் அதற்கான ரத்தினங் களையும் அணிவித்து அலங்கரிப்பதால் அபரிமிதமான சாந்நியத்தை மூர்த்தங்கள் அடைவதாக சுப்ரபேத ஆகமம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி,

ஞாயிறு .............................. மாணிக்கம்
திங்கள் ........................................முத்து
செவ்வாய்.................................. பவளம்
புதன் ....................................... மரகதம்
வியாழன்..............................புஷ்பராகம்
வெள்ளி .....................................வைரம்
சனி.................................இந்திரநீலம்

இவ்வாறு இறைவனை அலங்கரிக்க வேண்டும் என்றும், அதுவே மிகச்சிறப்பைக் கொடுக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

சந்தனம், அகில், குங்குமப்பூ, பச்சை கற்பூரம் இவைகளுடன் பன்னீர் கலந்த சந்தனத்தையே இறைவனுக்குச் சாத்தவேண்டும்.

# மகாவிஷ்ணுவை பற்றி அற்புதமான தகவல்கள்

- திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் உள்ள பெருமாளின் உற்சவத் திருமேனியில் மார்பில் சிவலிங்க அடையாளம் உள்ளது.
- உடுப்பி கிருஷ்ணருக்கு நவராத்திரி ஒன்பது நாட்களும் புடவை உடுத்துகிறார்கள்.
- ஆந்திராவில் பத்ராசலத்தில் ராமர் சங்கு, சக்கரத்துடன் காட்சியளிக்கிறார்.
- திருநெல்வேலிக்கு அருகில் உள்ள நாங்கு நேரியில் பெருமாளுக்கு தினமும் மூன்று லிட்டர் எண்ணெய் சாத்தப்படுகிறது. பின்பு இது பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது.
- சிவனைப்போல் முக்கண் உடைய பெருமாளைக் காண, சிங்கபெருமாள் கோயில் செல்ல வேண்டும். இங்குள்ள மூலவர் நரசிம்ம மூர்த்திக்கு மூன்று கண்கள் உள்ளன.
- திருக்கண்ணபுரத்தில் கண்ணபுரத்தான் பத்மாசனத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, பத்மினி, ஆண்டாள் என நான்கு தேவியருடன் சங்கு சக்கரம் தாங்கிக் காட்சியளிக்கிறார்.
- திருக்கோவிலூரில் உள்ள மூலவர் இலுப் பை மரத்தால் ஆனவர். இவரது பெயர் திருவிக்ர சுவாமி.
- கர்நாடகத்தில் உள்ள ஸ்ரீரங்கபட்டினத்தில் உள்ள ரங்கநாதர் எழுந்தருளியுள்ள ஆதி சேஷனுக்கு ஏழுதலைகள் இருப்பது வித்தியாசமானது.
- திருமலை, தான்தோன்றிமலை, உப்பிலியப்பன் கோயில், குணசீலம் ஆகிய நான்கு பெருமாள் கோயில்களிலும் தாயாக்கு சன்னதி இல்லை.
- பொதுவாக பெருமாள் ஆதிசேஷன் மேல் சயனித்தபடி இருப்பார். ஆனால் ஸ்ரீவைகுண்டத்தில் நத்தத்தில் ஆதிசேஷன் குடைபிடிக்க, பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.
- காஞ்சிபுரத்தில் உள்ள விளக்கொளிப் பெருமாள் கோயிலில் பெருமாள் ஜோதி வடிவில் இருப்பதாக ஐதிகம். இங்கு பெரிய கார்த்திகை அன்று பெருமாளுக்கு விளக்கேற்றி வழிபடுகிறார்கள்.
- கருங்குளத்தில் பெருமாளை மூன்று அடி உயரமுள்ள சந்தனக்கட்டை வடிவில் வைத்து அபிஷேக ஆராதனை செய்து பூஜித்து வருகிறார்கள். இதற்கு இரண்டு பக்கமும் சங்கு, சக்கரம் இருக்கிறது.
- மாமல்லபுரம் ஸ்தலசயனப் பெருமாள் கோயிலில் பெருமாள் ஒரு கரத்தை தலைக்கு வைத்துக் கொண்டு தரையில் சாய்வாகக் கால் நீட்டி சயனம் கொண்டிருக்கிறார். சங்கு, சக்கரம் இல்லை.
- காஞ்சி உலகளந்தபெருமாள் திருக்கோயிலில் திருமழிசையாழ்வாராலும், திருமங்கை மன்னராலும் மங்களாசாசனம் செய்யப்பட்ட நான்கு திவ்ய தேசங்கள் உள்ளன. பேரகம், நீரகம், காரகம், கார்வானம் ஆகியவையே அவை.







உலக வரலாற்றில் முதன் முறையாக



இலவச e-mail-book

எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக பெற

உங்கள் இ-மெயில் முகவரியை

கீழ்காணும் வாட்சப் எண் அல்லது இமெயில் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

Whatsup no.7299992699
aanmeegamalar@gmail.com

முடிந்த அளவு Share செய்து எங்கள் பணிக்கு உதவுங்கள்

# ஸனாதன் ஸன்ஸ்தாவின் தோற்றமும் அறிமுகமும்

'ஞானிகளின் ராஜா, உன்னத நிலையிலுள்ள குரு' என யாரைப் பற்றி வர்ணிக்க முடியுமோ அவரே ஸனாதன் ஸன்ஸ்தாவின் ஸ்தாபகரான பராத்பர குரு டாக்டர் ஆடவலே அவர்கள்! தர்மம், கலை, மொழி, தேசபாதுகாப்பு, தர்ம விழிப்புணர்வு ஆகிய விஷயங்களைப் பற்றி விரிவான நூல்களை தொகுத்ததால் அவர் 'ஞானகுரு'வாகிறார். 'உலக நலனுக்காக ஸாத்வீக மக்களை கொண்ட 'ஈச்வர ராஜ்யம்' (ஹிந்து ராஷ்ட்ரம், ஸனாதன தர்ம ராஜ்யம்) அவசியம்' என முதன்முதலில் அறிவித்ததால் அவரே 'ராஷ்ட்ரகுரு'வாகிறார்.

ஈச்வரப்ராப்தி விரைவில் ஏற்பட ஸாதகர்களுக்கு 'குருக்ருபாயோகம்' என்ற பெயரில் சுலபமான ஆன்மீக பயிற்சியை ஏற்படுத்தி அவர்களை வழிநடத்தி சென்றதால் அவர் 'மோக்ஷகுரு'வாகிறார்.

பராத்பர குரு டாக்டர் ஆடவலே அவர்கள் தன்னுடைய ஆர்வம், புத்திகூர்மை, ஆராயும் திறன், காரியங்களை நேர்த்தியாக செய்யும் ஆவல் ஆகிய குணங்களை ஆதாரமாகக் கொண்டு பத்திரிக்கைத் துறை, ஹிந்து ஒற்றுமை, ஆன்மீக ஆராய்ச்சி ஆகிய துறைகளில் பெரும் பங்களிப்பு செய்துள்ளார்.

மகரிஷிகள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே நாடி ஓலைகளில் வருங் காலத்தைப் பற்றி எழுதி வைத்துள்ளனர். இந்த ஓலைகளில் பராத்பர குரு டாக்டர் ஆடவலேஜி பற்றி எழுதியுள்ளது என்னவென்றால், 'டாக்டர் ஜயந்த் ஆடவலே, நிகழும் கலியுகத்தின் ஸ்ரீவிஷ்ணுவின் அவதாரமாவார்!' அப்பேற்பட்ட பராத்பர குருவின் வழிகாட்டுதலின்படி சாதனை செய்வதால் நம் ஆன்மீக முன்னேற்றம் விரைவில் ஏற்படும்; அதோடு ஹிந்து ராஷ்ட்ர ஸ்தாபனமும் நிச்சயம் ஏற்படும். இதன் நிரூபணமாக ஸனாதன் சாதகர்கள் பலருக்கு விரைவான ஆன்மீக முன்னேற்றம் ஏற்படுகின்றது மற்றும் ஹிந்து ராஷ்ட்ர ஸ்தாபனத்திற்காக எல்லா இடங்களிலுள்ள தேசபக்தர்கள், ஹிந்துத்வவாதிகள் குறிப்பிடும் வகையில் ஒன்றுபடுகின்றனர்.

'ஸனாதன் ஸனஸ்தா' மூலமாக ஆன்மீக பிரசாரம்: ஆன்மீக பிரசார காரியங்கள் அதிகரித்ததால் பராத்பர குரு டாக்டர் ஆடவலேஜி அவர்கள் 23 மார்ச் 1999 அன்று ஸனாதன் ஸனஸ்தாவை ஸ்தாபனம் செய்தார். பராத்பர குரு டாக்டர் ஆடவலேஜி அவர்களின் வழிகாட்டுதலால் ஆன்மீக பிரசாரம் செய்யக்கூடிய ஆயிரக் கணக்கான சாதகர்கள் உருவானார்கள். அதன் மூலம் வாராந்திர சத்சங்கங்கள், சொற்பொழிவுகள், தொலைகாட்சி சானல்களில் காண்பிக்கப்படும் சத்சங்கங்கள், பாலசன்ச்கார் வகுப்புகள், குருபூர்ணிமா விழாக்கள் போன்றவற்றின் மூலமாக ஸனாதனின் ஆன்மீக பிரசார காரியங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஸனாதன் ஸனஸ்தா வலைதளத்தின் 'Sanatan.org' மூலமாக சாதனை சம்பந்தமான வழிகாட்டுதல் மற்றும் சந்தேகங்களுக்கான விடைகள் அளிக்கப்படுகின்றன. அத்துடன் ஸனாதன் நூல்களிலுள்ள ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு தர்மபோதனை பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன.

ஈச்வரபிராப்தி விரைவில் கிடைக்க உதவும் 'குருக்ருபாயோக' வழியை உருவாக்கியவர்! : ஆர்வமுள்ளவர்களுக்கு ஈச்வரபிராப்தி விரைவில் கிடைக்க வேண்டும் என்பதற்காக பராத்பர குரு டாக்டர் ஆடவலேஜி அவர்கள், கர்ம, பக்தி, ஞானம் ஆகிய மூன்றும் சங்கமமான 'குருக்ருபாயோகம்' என்ற யோகத்தை தந்தருளியுள்ளார். குருக்ருபாயோகத்தில் ஆன்மீக சாஸ்திரத்தின் சித்தாந்தமான, 'எவ்வளவு மனிதர்கள் உள்ளனரோ, அவ்வளவு இயல்புகள், அவ்வளவு சாதனை வழிகள்' என்பதற்கேற்ப சாதனை வழியை வகுத்துள்ளார். அதனால் இதனை பின்பற்றி சாதகர்கள், விரைவான ஆன்மீக முன்னேற்றத்தை அடைய முடியும்!

குருகுலத்திற்கு சமானமான ஆச்ரம ஸ்தாபனம்! : சாதகர்கள், முழு நேர சாதனை செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை அமைய வேண்டும் என்பதற்காக பராத்பர குரு டாக்டர் ஆடவலேஜி அவர்கள் குருகுலத்திற்கு சமானமான ஆச்ர ம ங் க ளை உருவாக்கியுள்ளார். அவரின் சங்கல்பத்தால் ராம்நாதி (கோவா), தேவத் (மும்பை), மீரஜ் (சாங்க்லி, மகாராஷ்ட்ரா) வாரணாசி போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட ஆச்ரமங்களில் இருந்து கொண்டு சராசரி 800 சாதகர்கள் முழு நேர சாதனை செய்து வருகின்றனர்.

எல்லாவற்றையும் உள்ளடக்கிய நூல் தொகுப்பை தொகுத்தளித்தவர் : பராத்பர குரு டாக்டர் ஆடவலேஜி அவர்கள், தர்மம், ஆன்மீக சாஸ்திரம், தெய்வ உபாசனை, ஆசார தர்மம், சாதனை, பாலஸன்ஸ்கார், தேசபாதுகாப்பு, தர்ம விழிப்புணர்வு, இறைவனை அடைய கலை, ஆன்மீக உபாயம், ஆபத்துக்கால மருத்துவம் போன்ற பலவித விஷயங்களைப் பற்றிய நூல்களை தொகுத்தளித்துள்ளார். அவர் தொகுத்துள்ள 299 நூல்களில் 31.3.2017 வரை மராட்டி, ஹிந்தி, ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, தமிழ், மலையாளம், குஜராத்தி, குருமுகி, ஓடிஸா, பங்களா மற்றும் அஸ்ஸாமியா ஆகிய பாரதீய மொழிகளோடு கூட நேபாளி, ஜெர்மன் மற்றும் செர்பியா ஆகிய அயல்நாட்டு மொழிகளிலும் (மொத்தம் 15 மொழிகளில்), 68 லக்ஷம் 39 ஆயிரம் பிரதிகள் இதுவரை வெளிவந்துள்ளன. இப்பொழுதும் 8000 நூல்கள் வெளிவரும் அளவிற்கு விஷய ஞானம் சேர்ந்துள்ளன.

பராத்பர குரு டாக்டர் ஆடவலேஜி அவர்களின் நூல்களின் சில சிறப்பம்சங்கள்

- ஸனாதனில் அதிகபட்ச நூல்களில் இதுவரை பூமண்டலத்தில் எங்கும் கிடைக்காத அரிய ஞானம் 30 சதவிகிதத்திலிருந்து 70 சத விகிதம் வரை உள்ளன.
- இந்த நூல்களில் ஆன்மீகத்தின் பலவித அங்கங்களின் காரியகாரணசம்பந்தம் மற்றும் ஒவ்வொரு ஆன்மீக காரியத்தின் விளக்கம் 'எதற்கு மற்றும் எவ்வாறு?' என்ற ரூபத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.
- இதில் வெளியிட்டுள்ள ஆன்மீக சாஸ்திரம், விஞ்ஞான மாணவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் விஞ்ஞான மொழியில் (உதா. அட்டவணை, சதவிகித விவரங்களுடன்) எழுதப்பட்டுள்ளன.
- இதில் சாதனை பற்றிய வெறும் தத்துவ ஞானம் மட்டுமல்ல, மாறாக காலத்திற்கேற்றபடி நேரடி சாதனை செய்ய செயல்பாட்டு விளக்கங்களும் +` கொடுக்கப்பட்டுள்ளன.
- இந்த நூல்களில், தார்மீக காரியங்கள் மற்றும் சாதனையின் மூலமாக மனிதர்கள், பொருட்கள், வீடுகள் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலை மீது ஏற்படும் நல்ல அல்லது தீய பாதிப்பு பற்றிய விவரங்களின் சூட்சும வரைபடங்களும் விஞ்ஞான உபகரணங்களை உபயோகித்து செய்த பிரயோகங்கள் பற்றிய விவரங்களும் அடங்கியுள்ளன.

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் வெளியிடப்படும் பல ஆன்மீக கட்டுரைகள் அவர் தொகுத்தளித்துள்ள நூல்களை ஆதாரமாக கொண்டவை. ஜூலை 18,2017 அன்று பராத்பர குரு டாக்டர் ஜெயந்த் பாலாஜி ஆடவலே அவர்களின் அம்ருதமஹோத்சவம் மிக சிறப்பாக நடைபெறுகிறது. இந்த அம்ருதமஹோத்சவ வருடத்தில் அவரைப் பற்றிய கட்டுரையை வெளியிட்டு எங்களின் நன்றியை கா ணி க் கை யா க் கு கிறோம்.

(முழு விவரங்களுக்கு படியுங்கள் ஸனாதனின் தமிழ் நூல்கள் மற்றும் ஸனாதனின் ஸன்ஸ்தாவின் வலைதளம், 'www.sanatan.org'; தொடர்பு : 93809 49626)



மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
what-up no: 7299992699
aanmeegamalar@gmail.com

# அற்புதமான ஆடி மாதம்

ஜோதிட சாஸ்திரத்தில் ஆடிமாதத்தை ‘கர்கடக மாதம்’ என்பார்கள். சூரியன் குருவின் நட்சத்திரமான புனர்பூசம் நான்காம் பாதத்தில் நுழையும் நேரத்தில் கடக ராசியில் சூரியன் செல்வதே ஆடி மாத பிரவேசம்.



அந்தந்த கால, பருவ சூழ்நிலைக்கு ஏற்ப திருவிழாக்களையும், உற்சவங்களையும், விரத வழிபாடுகளையும் ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

- ஆடி மாதத்தில் இருந்துதான் விரதங்கள், பண்டிகைகள், உற்சவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக தொடங்குகிறது.
- இந்த மாதத்தை அம்மன் மாதம் என்றும் அம்பாள் மாதம் என்றும் சிறப்பித்து கூறுவார்கள்.
- வீடுகளிலும், கோயில்களிலும் விழாக்களும், விரத வழிபாடுகளும் களை கட்டி விடும்.
- அம்மன், அம்பாள், ஆண்டாள், சக்தி ஸ்தலங்களில் சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் என்று பக்தி மணம் கமழும்.
- ஆடி மாதத்தில் வரும் செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகள் மிக விசேஷமானவை.
- ‘ஆடி செவ்வாய் தேடிக் குளி’ என்பது பழமொழி. அதாவது விரதம் இருந்து எண்ணெய் தேய்த்து குளித்து அம்பாளை வழிபட பெண்களின் மாங்கல்ய பலம் கூடும் என்பது ஐதீகம்.
- ஆடி வெள்ளி வழிபாடு செய்வது சகல பாக்யங்களையும் அள்ளித் தரும். திருமண பாக்யம் கைகூடிவரும்.
- புதுமண தம்பதியருக்கும் நீண்ட காலமாக குழந்தை பாக்யம் எதிர்பார்த்திருப்போருக்கும் நல்ல அறிவாற்றல், புத்தி சாதுர்யத்துடன் கூடிய குழந்தை பாக்யம் உண்டாகும்.
- ஆடி ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனைகளையும் நேர்த்திக் கடன்களையும் செலுத்தும் நாளாக கருதப்படுகிறது.
- அலகு குத்தி காவடி எடுத்தல், பால்குடம் எடுத்தல், பொங்கல் வைத்து வழிபடுதல், சிறப்பு பூஜைகள் செய்தல், தீ மிதித்தல், கூழ் ஊற்றுதல், அம்மன் கோயில்களுக்கு சென்று வழிபடுதல் என்று இந்த மாதம் முழுவதும் பக்தி மார்க்கத்தில் மூழ்கித் திளைப்பார்கள்.
- ஆடி வெள்ளி, செவ்வாய், ஞாயிறு தவிர ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆடிக்கிருத்திகை, ஆடித்தபசு ஆடி பவுர்ணமி, ஆடிப்பெருக்கு என்று பலப்பல விசேஷ நாட்கள் இந்த மாதத்தில் வருகின்றன.
- இதில் ஆடி அமாவாசை முக்கியமானது. அன்றைய தினம் கடல், நதிகள் உள்ளிட்ட புனித நீர்நிலைகளில் நீராடி, முன்னோர்க்கு திதி கொடுப்பது மிகவும் சிறப்பானதாக கருதப்படுகிறது.
- அவரவர் குடும்ப வழக்கப்படி வீட்டில் படையல் இட்டு வழிபட்டு முன்னோர் நினைவாக இல்லாதோர், இயலாதோர், முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களில் அன்னதானம், உடை, போர்வை போன்றவற்றை வழங்குவது பல்வேறு பாவங்களை நீக்கி புண்ணிய பலன்களை சேர்க்கும்.
- ஆடி மாதத்தின் 18வது நாள் ‘ஆடிப்பெருக்கு’ என்று கொண்டாடப்படுகிறது.
- இந்நாளில் பெண்கள் தாலிக்கயிறு மாற்றி புதுக்கயிறு அணிவார்கள்.
- திருநெல்வேலி அருகில் உள்ள சங்கரன் கோவிலில் ஆடி தபசு பிரசித்தி பெற்றது.
- கோமதி அம்மனின் தவத்துக்கு இரங்கிய சிவபெருமான், புன்னை வனத்தில் சங்கர நாராயணராக ஆடி பவுர்ணமியன்று காட்சியளித்தார்.
- ஆடிப்பூரம் ஆண்டாள் அவதாரம் செய்த திருநட்சத்திரம். கன்னிப் பெண்களும் திருமண பாக்யம் கைகூடாமல் இருக்கும் பெண்களும் இந்த நாளில் விரதம் இருந்து பக்தியுடன் ஆண்டாள் அருளிச் செய்த ‘வாரணமாயிரம்’ என்று தொடங்கும் பாசுரத்தை பாடி வர திருமண பிராப்தம் கூடிவரும்.
- இத்தனை சிறப்புகள் மிக்க ஆடி மாதத்தில் நல்ல காரியங்களை ஆரம்பிக்க கூடாது, செய்யக் கூடாது என்ற கருத்து நிலவுகிறதே. எதனால்?
- இந்த மாதத்தில் விரதங்கள், வழிபாடுகள், கோயில் திருவிழாக்கள் மாறிமாறி வந்துகொண்டே இருக்கும்.
- ஆன்மீகத்திலும் இறை வழிபாட்டிலும் மனப்பூர்வமாக ஈடுபட வேண்டியிருப்பதால் மற்ற காரியங்களில், விசேஷங்களில் கவனம் செலுத்துவது சிரமம்.
- இறைவனை துதிப்பதற்கும், அவன் சிந்தனையாகவே ஆன்மீக ஸ்தலங்களுக்கு சென்று தரிசனம் செய்வதற்கும் இடையூறாக மற்ற விழாக்கள், நிகழ்ச்சிகள் இருந்துவிட கூடாது என்பதற்காகவே மற்ற சுப விசேஷங்கள் இந்த மாதத்தில் தவிர்க்கப் படுகிறது.

– ச.நாகராஜன், ஆசிரியர்

## ஆடிக்கஞ்சி



ஆடி மாதம் வீசக்கூடிய காற்றின் வேகம் அதிகமாக இருக்கும். அதனால் எங்கும் தூசியாக இருக்கும். இதனால், இருமல் போன்ற நோய்கள் வரலாம். இதைத் தவிர்க்கவே மாரியம்மன் கோயில்களில் ஆடி மாதம் முழுவதும் கூழ் ஊற்றுவார்கள். இதை ஆடிக்கஞ்சி என்பர்.

அதிமதுரம், சீரகம், திப்பிலி, சின்ன வெங்காயம், திரிகடுகம், குன்னிவேர், உழிஞ்சி வேர், சீற்றாமுட்டி, கடலாடி வேர்இவற்றை லேசாகத் தட்டி எடுத்து, ஒரு வெள்ளைத் துணியில் கட்டி வைத்துக்கொள்ளவேண்டும்.

அரிசியைக் கஞ்சியாக வேகவைத்து அதில் இந்தத் துணியில் உள்ள மருந்துகளைப் பிழிய வேண்டும்; அல்லது, கஞ்சிக்குள் அந்தத் துணிப் பொட்டலத்தைச் சிறிது நேரம் போட்டு ஊறவைத்து, எடுத்துவிடவேண்டும். அதன்பிறகே ஆடிக் கஞ்சியைப் பரிமாற வேண்டும். இந்த முறையை எல்லாரும் பின்பற்றுவது நல்லது.

# எந்த விதத்தில் முடியுமே அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக் கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், ‘நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?’ என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி ‘நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?’ என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய் தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், ‘என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!’ என்று மனஸார வருத்தப்பட்டு நீள மாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீ கரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண் டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.



முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் ஸமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத் தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். ‘பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்’ என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்





## வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில் இந்து சமயக் கருத்துக்களையும், பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

# ஆன்மிகமலர் டிரஸ்ட்

**Tamilnadu Government Redg.304/2016**

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
**7299992699 / 8825844033**

# உங்களுக்குள்ளிருந்து மிகச்சிறந்தவற்றை வெளிக்கொணருதல்

## 14 பாகம்

## மனித வாழ்வு மேம்படுவதற்காக

## பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

பரமஹம்ஸர் கூறுகிறார்: “மேம்பட்டவராக மாறுவதற்கான முயற்சி எடுப்பதை மறுக்கும்பொழுது மட்டுமே முதியவர் ஆகிறார். அத்தகைய தேக்கநிலையை மட்டுமே “முதுமைக்காலமாக” நான் ஒப்புக்கொள்கிறேன். ஒரு மனிதன் “திரும்பத்திரும்ப என்னால் மாற முடியாது, இம்மாதிரிதான் நான்” என்று கூறும்பொழுது “சரி, அவ்வாறிருக்கத் தீர்மானித்தால் அப்படியே இருங்கள்’’ என்று நான் கூற வேண்டியிருக்கிறது. ஒருவன் ஒழுக்கம், சுயக்கட்டுப்பாடு ஆரோக்கியம் இவை இருந்தால் ஏன் மாற முடியாது? கெட்ட எண்ணங்கள் தோன்றும் ஒவ்வொரு முறையும் அதை அகற்றி விடுங்கள். நல்லொழுக்கமும் தூய்மையும் பலவீனத்தால் வேரூன்றியவை அல்ல. அவை தீய சக்திகளுடன் போரிடுகிற வலிமையான பண்புகளாகும். “இதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்”

“தனக்காக மட்டும் வாழ்வது எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணமாகும். மற்றவர்களுக்கு ஆன்மீக, மன மற்றும் லௌகீக ரீதியாக சேவை செய்தால் உங்களுடைய சொந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதைக் காணலாம். மற்றவர்களுக்குச் சேவை செய்வதில் நீங்கள் தன்னையே மறக்கும் பொழுது நீங்கள் நாடாமலேயே உங்கள் மகிழ்ச்சிக் கோப்பை நிரம்பி விடுவதைக் காண்பீர்கள். அழகிய ஆடைகள், தூய்மையான வீடுகள், சுவைமிக்க விருந்துகள், மிருதுவான மெத்தைகள் மற்றும் போகப் பொருட்களில் மகிழ்ச்சியை தேடாதீர்கள். இவை புறக்காட்சி மற்றும் புறவாழ்க்கை ஆகிய கம்பிகளுக்குப் பின்னால் உங்களது மகிழ்ச்சியை சிறைபிடித்துவிடும்.”

குருதேவர் கூறியவாறு இறைவனை அடைய வேண்டுமென்றால் தூய்மையான மனம் வேண்டும். அது எளிமையான வாழ்விற்கான மனநிலையை உருவாக்குகிறது. இல்லறத்தில் இருந்தும் இறைவனை அடையலாம். இல்லறம் எவ்வாறிருக்கும் என்பதையும், பிரச்சனைகளை எவ்வாறு சமனப்படுத்த முடியும் என்பதையும் கூற விரும்புகின்றேன்.

இல்லற வாழ்க்கையில் அடிக்கடி பிரச்சனைகள் உருவாகும். பிரச்சனை இல்லாத இல்லறம் இல்லை. மனிதனாகப் பிறவி எடுத்ததே பிரச்சனைகளை சந்திப்பதற்கும் அவற்றை அனுபவித்துத் தீர்ப்பதற்கும் தானே. கனவான இவ்வாழ்வில் நிகழ்வது அனைத்தும் கனவுகள் தானே. எனவே இந்த வாழ்வில் மேன்மையாகக் கூறுவதற்கோ மேன்மையாக எடுத்துக் கொள்வதற்கோ எதுவும் இல்லை என்றுதான் கூறலாம். ஆனால், எல்லாம் ‘கனவு’ என்று எண்ணுகின்ற இந்த வாழ்வில் மேன்மையாகக் கருதுவதற்கு சில விஷயங்கள் உள்ளன. அவை வாழ்வின் போதும், வாழ்வின் பின்னரும் நிற்கக் கூடியவை. அவை வாழ்வை மேம்படுத்தக்கூடியவை. அது என்னவென்றால் இறைவனுக்காகச் செய்யும் சேவைகளேயாகும். தனக்கென்று வாழாமல் பிறருக்காக வாழ்வதே மேன்மையானது.

அந்த கனவு வாழ்க்கையில் செய்யும் மேலே கூறப்பட்ட சேவைகள் நிஜமாகிறது. அவ்வாறான பொதுநல சேவைகள் என்றென்றைக்கும் நீடிக்கிறது; அவற்றிற்கு அழிவில்லை; அவை காலத்தை வெல்லச் செய்கிறது. ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் சேவையே தன் பணியாக ஏற்றுக்கொண்டு தன் வாழ்நாளைக் கடத்தினால் அவன் இந்த உலகத்தை விட்டுச் சென்றாலும் அவன் பெயரும் அவன் செயல்களும் அழியாமலிருக்கும். உலகம் உள்ள காலம் வரை இருக்கும் இந்த சேவை ஆன்மீகப் பாதைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. எத்தனையோ பேர் அவ்வாறு வாழ்ந்துவிட்டுச் சென்றுள்ளனர்.

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் ஆன்மீகப் பாதையில் இருப்பார்களேயானால் அவர்கள் வாழ்க்கையில் இறைவனின் அனுபூதியை தடையின்றி உணருவர். மாறாக கணவன் அல்லது மனைவி ஆன்மீகப் பாதையிலும் மனைவி அல்லது கணவன் லௌகீகத்திலும் இருப்பார்களேயானால் ஆன்மீகப் பாதையில் தடைகள் ஏற்படுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன.

ஆன்மீகப் பாதையில் செல்லுகின்ற கணவனாக இருந்தாலும் சரி மனைவியாக இருந்தாலும் சரி அவர் அனைத்து தடைகளையும் இறைவனின் துணையால் கடந்து செல்வர். அப்பொழுதுதான் தடை செய்தவர் உணர்த்தப்படுவர். இருவருக்கும் ஆன்மீகப்பாதை கிடைத்தால் அது மிகவும் உத்தமமானது. அவர்கள் மிகவும் பாக்கியசாலிகள்.

இல்லறம் என்றால் என்ன என்றும் அது எவ்வாறிருக்கும் என்றும் உள்ள உண்மை எல்லோருக்கும் தெரியும். இருப்பினும் என்னுடைய கருத்தினை கூறலாம் என்று நினைக்கிறேன். இந்த வாழ்க்கையில் பிரச்சனைகளின்றி யாருமே இருந்ததாக சரித்திரமே கிடையாது. உதாரணமாக, ஒருவன் நறுமணமுடைய அழகான மலர்களைத் தருகின்ற ஒரு செடியை வாங்கி நட்டு தண்ணீர் ஊற்றி வளர்க்கிறான். சிறிது நாட்களில் அது தழைத்து வளர்ந்து மலர்களைத் தருகிறது. செடியை நட்டவன் அதைக் கண்டு மகிழ்கிறான். மேலும் சிறிது நாட்களில் ஏதோ ஒரு காரணத்தால் அந்தச் செடி காய்ந்துவிட்டது. செடியை நட்டவன் அதைக் கண்டு ‘காய்ந்தது காய்ந்து போகட்டுமே’ என்று விடாமல் மீண்டும் எப்படியோ அந்தச் செடியை பிழைக்க வைக்கிறான். நன்கு வளர்ந்து வரும் நேரத்தில் அதன்மீது விஷம் கலந்த மருந்து தெளித்தால் உடனே அது நெருப்பில் விழுந்தது போலாகிவிடுகிறது.

இந்தச் செடியின் நிலை உடைய வாழ்க்கைதான் இல்லறத்திலுள்ள மனிதனின் வாழ்க்கையும். இதில் மனம் பிரச்சனைகளால் உடைந்து, பின்னர் தெளிவடைந்து, மீண்டும் உடைந்து, தெளிந்து, கடந்து போவதுதான் இல்லற வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் நிரந்தரமான மகிழ்ச்சியே கிடையாது. ஆனால் ஆன்மீக வாழ்க்கை அவ்வாறன்று. அதற்கு ஓர் உதாரணத்தைக் கூறுகிறேன். சித்திரை மாத உச்சி வெயிலில் நடந்து வந்து நிழல் பார்த்து உட்கார்ந்து களைப்பாறிய பின்னர் குளிர்ந்த பானம் எதாவது அருந்தினால் உள்ளுக்குள் குளிர்ச்சி அனுபவப்படும் அல்லவா!. அதன் பல மடங்கு அதிகமாக இருக்கும் ஆன்மீக வாழ்க்கையின் அனுபவம். இது இல்லற வாழ்க்கையிலிருந்து ஆன்மீக வாழ்க்கைக்குச் செல்லுகின்ற மனிதனுக்கு மட்டும்தான் தெரி யும்.

ஆன்மீக வாழ்க்கையில் இறைவனின் அன்பை, பேரன்பை அனுபவிக்க முடியும். அது குளிர்ந்த பானம் போன்று நிரந்தரமான அன்பு மற்றும் உண்மையான அன்பேயாகும். இல்லற வாழ்க்கையில் உண்மையான அன்பும் கிடையாது; எந்தப் பிடிப்பும் கிடையாது. ஆன்மீக வாழ்க்கையில் உறுதியான பிடிப்பு ஒன்று இருக்கும். அதுதான் இறைவன். ஏனென்றால் அன்புதான் இறைவன். இல்லற வாழ்க்கையில் கிடைக்காத, மாறுதலற்ற அன்பு ஆன்மீக வாழ்க்கையில் பெற முடியும். மாறுதலற்ற அன்பு மேன்மையானதா? மாறக்கூடிய அன்பு மேன்மையானதா? என்பதை அவரவர்களே முடிவு செய்யவேண்டியதுதான்.

அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் மயக்க மருந்தினால் மனிதனை மயக்கமுறச் செய்து அறுவை சிகிச்சை செய்கிறார் மருத்துவர். அது போன்று ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் தமக்குத் தாமே விஷ ஊசிகளை போட்டுக் கொள்கிறோம். ‘விஷ ஊசி’ என்றால் பிரச்சனைகள்தான். பிரச்சனைகள் என்னும் விஷ ஊசியினால் துயரமெனும் மயக்கம் மனதை வாட்டுகிறது. இப்படிப்பட்ட இல்லற வாழ்க்கையில் நான்கு நாட்கள் மகிழ்ச்சியாக இருந்தால் ஐந்தாவது நாளிலிருந்து மேலே கூறிய துயர மனப்பான்மை ஏற்படுகிறது. அது சிறிது நாட்கள் நீடிக்கிறது. அப்பொழுது மகிழ்ச்சிக்குப் பதிலாக துயரம் அதிகரிக்கிறது. கூட்டிக்கழித்துப் பார்த்தால் மகிழ்ச்சியை விட துயரம்தான் அதிகமாக இருக்கிறது. இந்த நிலையில்தான் இல்லறம் கடந்து சென்றுகொண்டிருக்கிறது.



இவ்வாறான மகிழ்ச்சியும் துயரமும் கலந்த நிலையில் ஒருவன் தன்னுடைய வாழ்க்கையை இறைவனுடன் இணைத்து வாழ்ந்தால், துயரம் அதிகமாக இருந்தாலும் அவை அதிகமாகத் தாக்காது. நாட்கள் செல்லச் செல்ல துயரமும் இல்லாமலாகிவிடும். எவ்வாறெனில், கசப்பு மருந்து என்றால் குழந்தைகள் அருந்துவது மிகவும் கடினம். குழந்தைகளின் நோயை எப்படியாவது தீர்த்தாக வேண்டுமென்றெண்ணி அழவைத்தாவது கசப்பு மருந்து கொடுத்த பின்னர், சிறிது தேன் அல்லது சர்க்கரையை குழந்தையின் வாயில் ஊற்றினால் குழந்தை நன்கு சுவைத்துச் சாப்பிடுவதைக் காணலாம். அத்துடன் குழந்தையின் அழுகையும் நின்றுவிடும். நோயும் குணமாகும். அதுபோன்றுதான் இல்லறத்தில் ஏற்படும் துயரத்தைக் குறைப்பதற்காக இறைவனை நாடவேண்டும். அங்கே இறைவன் ‘தேன்’ அல்லது ‘சர்க்கரை’ ஆகிவிடுகிறான். அதற்கு இறைசித்தத்துடன் நம் சித்தத்தை இணைக்க வேண்டும். அத்துடன் இறைவனின் பணிகளைச் செய்யவேண்டும்.

இறைவனின் பணிகள் என்றால் மற்ற மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் சேவை செய்தல். இவ்வாறு செய்யும் சேவையினால் இரண்டு பயன்கள்

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

உள்ளன. ஒன்று சேவையினால் மன அமைதியும் முழுமையான மன திருப்தியும் கிடைக்கப்பெறும். இரண்டாவது பயன், அதனால் பிறவியை அறுத்துவிட்டு இறைவனடி சேரலாம். இது எவ்வளவு பெரிய விஷயம். எங்கேயும் கிடைக்காது. எவ்வாறெனில், இந்த சேவை இறைவனை தேடச் செய்கிறது. அதைத் தொடர்ந்து இறைவனை அடைவதற்கான எல்லா வழிகளும் திறக்கிறது. ஏனென்றால், சேவை என்பது இறைவனே ஆகும். வேறு எங்கேயும் இறைவனை தேட வேண்டாம். இறைவனை அடைவதற்காக உள்ள வழிகளை அல்லது செய்திகளை மற்ற மனிதர்களுக்குச் சென்றடையும்படியான சேவையைச் செய்யவேண்டும். மனித சேவையை ஊக்குவிக்கிறார் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர். இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் மேம்பட்டவனாக மாறவேண்டும் என்றும் அவர் கூறுகிறார். மனிதன் தன் தீயப்பழக்கங்களிலிருந்து விலக வேண்டும். அதுமட்டுமின்றி இறைவனை அடைவதற்குத் தடையாக இருக்கும் எல்லா தீயப் பழக்கங்களிலிருந்தும் விலகி தன்னை ஒரு தூயவனாக மாற்றிக் கொள்ளவேண்டும்.

## இறைவன் பேரன்பன்

கிரியா யோகத்தினால் இறைவனை அடைய முடியும் என்பது உண்மையிலும் உண்மை. அவ்வாறிருக்கையில் உண்மையான ஒரு கிரியா யோகி, உண்மையிலேயே இறைவனை நேசிக்கின்ற ஒரு பக்தன், இறைவனிடத்தில் சரணாகதி அடைந்த ஒரு பக்தன், அன்றாட கர்மங்களை அதாவது மனம், வாக்கு செயல் இவற்றினால் ஏற்படும் கர்மங்களை இறைவனிடத்தில் அர்ப்பணம் செய்து வாழும் ஒரு பக்தன், இறைவனுக்காக வாழுகின்ற, அனைத்தும் இறைவன் என்ற எண்ணத்துடன் ஒரு இறை வெறியனாக "இறைவன் இல்லையேல் தான் இல்லை" என்பதை புரிந்துகொண்டுள்ள மனப்பான்மையுடன் வாழும் ஒரு பக்தனுடன் இறைவன் நிச்சயமாக இருப்பான்.

அது அந்த பக்தனுக்கும் தெரியும். மேற்கண்டவாறான பக்தனுடன் இறைவன் இருப்பது மட்டுமின்றி அவன் தன்னுடைய அன்றாட வாழ்க்கையில் மனம், வாக்கு, செயல் இவற்றால் ஒரு சிறு தவறு கூட ஏற்படாமலிருப்பதற்கும், ஏற்பட்டால் அந்தத் தவறை அந்த பக்தனுக்கு உணர்த்தி, அதை மீண்டும் செய்யாதவாறு அன்பாகத்திருத்துவதைபக்தனால்நன்குஉணரமுடியும். அது மட்டுமின்றி இறைவனிடம் சரணாகதி அடைந்த ஓர் இறைபக்தன், தான் செய்தது தவறுதான் என்பதை உடனே உணருவான். செய்த தவறை எண்ணி வருந்துவான். அதே சமயம் தவறை 'தவறு' என்று உணர்ந்த பின்னர் அவற்றை அனைத்தையும் இறைவனிடத்தில் அர்ப்பணம் செய்வான். அவ்வாறு செய்தால் அந்தத் தவறைப்பற்றி கவலைப்பட்டதெல்லாம் பறந்தோடிவிடும். அத்துடன் மனதின் உறுத்தலும் பாரமும் எல்லாம் மறைந்துவிடும். தாம் எந்தத் தவறும் செய்யாதது போன்றுள்ள ஒரு புது மனநிலை ஏற்படும். அதாவது மனம் தூய்மையாகிவிடும். இவ்வாறு அனைத்தையும் செய்து மனநிலையை மாற்றுவதும் தூய்மையடையச் செய்வதும் எல்லாம் வல்ல இறைவனேயாவான். தீமை மட்டுமின்றி நற்செயல்களையும் இறைவனிடம் சமர்ப்பிக்கவேண்டும். உண்மையில் இறைவனை நேசிக்கின்ற ஒரு பக்தனால் இவற்றையெல்லாம் உணரமுடியும்; உணராமல் கூற இயலாது. இறைவன் அன்பன் மட்டுமல்ல, அவன் ஒரு பேரன்பன் ஆவான். தன்னை நேசிக்கின்ற ஒரு குழந்தையிடத்தில் அல்லது தன் பக்தனிடத்தில் உள்ள அன்பின் மிகுதியால்தான் அவன் தன் குழந்தையின் தவறுகளை திருத்திக்கொள்ளும்படி உணர்த்துகிறான்.

அதுபோன்று இறைவனை முழுமனதுடன் நேசிக்கின்றவர் யாராக இருந்தாலும் இறைவன அவனுக்குச் சிறப்பாக உதவுவது மட்டுமின்றி அதனால் ஏற்படவுள்ள ஆபத்திலிருந்து அவனைக் காப்பாற்றவும் செய்வான். எனவே உலகப்பொருளாசைகள் அனைத்தையும் துறந்து, அவனிடம் சரணாகதி அடைந்து அவனுக்காக மட்டும், அவனை அடைவதற்காக மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களுடன் இறைவன் இருப்பான். தம் வாழ்க்கையில், எது நடந்தாலும் 'அவன் திருவுள்ளப்படியே நடக்கட்டும்' என்று அனைத்தையும் இறைவன் மேல் விட்டுவிட்டு வாழவேண்டும். நாம் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால் "பணம் எல்லாத் தீமைகளுக்கும் வேர். அது புலன்களை மயக்கி இறைவனின் திருவடியிலிருந்து மனதை வெகுதொலைவிற்குக் கொண்டு சென்று விடுகிறது" என்று ஸ்ரீ ராமானுஜரின் சீடரான வரதாச்சாரியார் கூறினார். இறைநெறி வாழ்க்கை வாழ காமம், பணம் இவற்றை முற்றிலும் துறந்தால் தான் இறைவனடி சேரமுடியும்.

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் இன்னும் மனிதகுல சேவையை செய்துகொண்டுதான் இருக்கிறார். இறைவனுக்காக நம்மை அழகுபடுத்திக்கொள்ள தேவையில்லை. நம்மை அழகுபடுத்திக்கொள்வதும் நம் இருப்பிடத்தை அழகுப்படுத்திக்கொள்வதும் முக்கியமல்ல. நம்முடனிருக்கும் உறவினர்கள் துன்புற்றால் அவர்களுக்கு உதவ வேண்டும். பிற மனிதர்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்பதை இறைவன் கற்றுத்தருவான். மனிதகுல சேவை மிகவும் முக்கியம். அது சம்பந்தமாக நான் பள்ளியில் கற்றுக்கொண்ட ஒரு பாடலை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் கற்றுக்கொண்டது மலையாளத்தில். அதன் தமிழாக்கத்தை குறிப்பிட்டுள்ளேன்.

"அருகிலிருக்கும் தன் சகோதரனை பார்ப்பதற்கு கண்கள் இல்லாதோர்க்கு இறைவனைக் காணமுடியாது என்றால் அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?" வாழ்க்கையில் துன்புறும் உடன்பிறந்த சகோதரர்களை பார்த்து உதவாமலிருப்பவர்களுக்கு இறைவன் காட்சி அளிக்கமாட்டான். அன்பு, சேவை இவை இறைவனே. சுயநலமாக இருப்பவர்களுக்கு இறைவனை காணமுடியாது என்று சொன்னால் அதில் ஆச்சரியமேதுமில்லை. இதுதான் அந்தப் பாடலின் பொருள். 'சுயநலம்' இறைவனை காண ஒரு பெரிய தடையாக உள்ளது. சுயநலமாக இல்லாமல் பரோபகாரியாக வாழவேண்டும். இதுபோன்ற பல படிப்பினைகளைத் தந்துகொண்டிருப்பார் இறைவன். நம் பக்கத்திலிருக்கும் ஆத்மாக்களுக்கு மட்டுமின்றி தொலைதூரத்திலிருப்பவர்களுக்காகவும் நம்மை இறைவன் பயன்படுத்துவான். அவன் எப்படி வழிகாட்டுகிறானோ அப்படியே நாமும் அவன் பாதையில் சென்றுகொண்டிருக்க வேண்டும். அதுமட்டுமின்றி சேவைகளை காலந்தாழ்த்தாமல் உடனுக்குடன் செய்து முடிக்கும்படி உத்தரவிட்டுச் செய்யவைப்பான். விரோதியானாலும் சரி ஒரே குடும்பத்திலுள்ளவர்களுக்கு 'அவர்களுக்குச் செய்' என்று கட்டளையிடுவான் இறைவன்.

ஒன்றுமே தெரியாதவர்களுக்கு ஆருயிர் அன்பின் குருதேவர் அல்லது இறைவன் இருவரும் ஒன்று தான் தருவதுதான் அனைத்தும். உதாரணங்களுடன் கூடிய கருத்துக்களைத் தருவான். இறைவனுடைய அறிவுரைபடியே, அவனுடைய வழிகாட்டுதலின்படியே வாழுபவர்களுக்கு இறைவன் உடன் இருந்து உதவுவான். அவனை சரணடைந்தவர்களின் பணிகளை இறைவனே செய்து முடிப்பான். அதனால்தான் இறைவனுக்கு 'சரணாகதவத்சலன்', 'பக்தவத்சலன்' மற்றும் 'பக்ததாசன்' என்ற பெயர்களில் அவன் அழைக்கப்படுகிறான். இவ்வாறானவர்களுக்கோ அவர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கோ ஏதாவது ஆபத்து வரப்போகிறது என்றால் அந்த ஆபத்தை நீக்கி அதற்கான பயத்தையும் போக்குவதற்கு இறைவனே எவ்வாறு தன்னிடத்தில் பிரார்த்தனை செய்யவேண்டும் என்பதை கற்றுத்தந்து அந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றி, பயத்தையும் தெளியவைப்பான்.

அதுமட்டுமின்றி, வழக்கமான பணிகளை அல்லாமல் வழக்கத்திற்கு மாறான பணிகளையும் செய்யவைப்பான் இறைவன். குடும்பத்திலுள்ள திருமணமாகாத ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் செய்துவைக்க உதவுவான். அனைத்தையும் செய்து முடித்த பின்னர் அவன் மிகவும் மகிழ்வான். செய்வதனைத்தும் அவனே. ஆனால் நாமே செய்வது போன்று அவன் மிகவும் மகிழ்வான். இதிலிருந்து அனைத்திற்கும் காரணகர்த்தா "இறைவன்" அவன் தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. தவறு செய்பவர்களுக்கு திருந்துவதற்காக சில சந்தர்ப்பங்களைக் கொடுத்து சில பணிகளை செய்ய கட்டளையிடுகிறான். அந்த சந்தர்ப்பங்களை பாழாக்காமல் அவனுடைய வழிகாட்டுதலை ஏற்று நடந்துகொண்டால் அவன் மிகவும் மகிழ்வான். அந்தச் சந்தர்ப்பங்களை நழுவ விடுவது மிகவும் தவறு. பாவமும் கூட. அது அவ்வாறு செய்பவர்களுக்கு அச்செயல் கர்மாவை உருவாக்குகிறது. 'மனித சேவை' அல்லது 'சேவை'யை முன்னிட்டு இறைவன் தன் குழந்தைகளிடம் பிறருக்கு உதவி செய்யச் சொல் கிறான். உதவி செய்யும்படியான மனப்பான்மை உடையவர்கள் அதை ஏற்றுக்கொண்டு உதவி செய்வர். உதவி செய்ய துளிகூட மனமில்லாத சுயநலவாதிகள் இறைவனின் வழிகாட்டுதலை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் இறைவனின் வழிகாட்டுதலை தெரியாமலிருப்பர். சுயநலமுடையவர், செயல்களைச் செய்ய 'முடியாது' என்பர். அவர்கள் கெட்ட எண்ணம் உடையவர்கள். இப்படிப்பட்டவர்கள் இறைவனைத் தேடவும், அவனை அடையவும் உள்ள நற்பேறு பெறமாட்டார்கள். அவ்வாறானவர்கள் தம்மைத்தாமே திருத்திக்கொள்ளவும் கெட்ட எண்ணங்களை மாற்றிக்கொள்ளவும் முயற்சிக்க வேண்டும்.

மற்றொரு விஷயம் என்னவெனில், நாம் ஒரு குடும்பத்தில் வந்து பிறந்த பின் பணி எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் நம்மால் செய்ய முடிகின்ற பணிகளை நாமே தான் செய்யவேண்டும். அதற்காகத்தான் நாம் பூமிக்கு வந்துள்ளோம். தேவையின்றி குடும்பத்தில் வேலையாட்களை வைத்து பணிகளைச் செய்வதை இறைவன் விரும்பமாட்டான். இவ்வாறு இறைவனை உணர்ந்து அறிந்து அவன் காட்டும் வழியில் நடப்பது மனிதனின் கடமை. ஆனால் அதை யாரும் செய்வதில்லை. முழுமையாக அவனிடம் சரணடைந்தவர்கள் மட்டும்தான் அதைச் செய்வார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இறைவன் அனைத்தையும் உணர்த்திக்கொண்டிருப்பான். சரணடைந்தவனின் முழுமனதுடன் செய்யும் சேவையினாலும், தியானத்தினாலும் இறைவன் தன்னை அவனுக்கு வெளிப்படுத்துகிறான். இவ்வாறான இறைவனின் அறிவுரைகளை படிக்கின்றவர்கள் பயனடைவர்; ஆசீர்வதிக்கப்படுவர். நமக்கு விதித்த பணிகள் எதுவாயினும் அவற்றை முழுமனதுடனும் செம்மையாகவும் முடித்தால் மட்டும்தான் சம்சார வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறமுடியும்.

"ஜெய் குரு"

மீண்டும் மலரும்....

குருப்ரியா Cell No. 9894595909





www.aanmeegamalar.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
•••
இணை ஆசிரியர்
முருகன்
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா Cell 9894595909
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
•••
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070




# அனைத்து திருஷ்டிகளையும் போக்கும் கடல் நீர்

சிறு வேலை செய்தாலும் உடல் சோர்வு ஏற்படும். அதற்கு இரண்டு காரணங்கள்தான் உள்ளது. முதல் காரணம் உடல் பலவீனம், இரண்டாவது கண்திருஷ்டி.

நம் உடலில் ஏழு சக்கரங்கள் உள்ளது. அந்த சக்கரங்கள் நல்ல விதத்தில் இயங்கி கொண்டு இருந்தால் உடல்நிலை பாதிப்பு வர வாய்ப்பு இருக்காது. குழாயில் அடைப்பு இல்லை என்றால் தண்ணீர் தடை இல்லாமல் வருவது போல, நம் உடலில் இருக்கும் சக்கரங்கள் பலமாக இருந்தால் உடலுக்கு நம்மை ஏற்படும். மூங்கில் மரத்தின் வேரில் நெல்லை போட்டால் அந்த மரமே பட்டுபோகும். அதுபோல அதிக திருஷ்டிபட்டால் உடலில் இருக்கும் சக்கரங்கள் சரியாக இயங்காமல் வழுவிழந்து பலவீனமாக இருக்கும்.

இதற்கு பரிகாரம் கடல் தண்ணீர். கடல் தண்ணிரில் குளித்தால் உடலில் இருக்கும் அந்த ஏழு சக்கரங்களும் பலம் பெறும். எப்படி தணணீர் வானத்திற்கு சென்று மழையாக திரும்பி வருகிறதோ அதுபோல, கடல் தண்ணீர் உடலை நனைத்து நம்முடைய உடலில் உள்ள சப்த சக்கரங்களை பலப்படுத்தும்..

அதேபோல, ஒரு வீட்டிற்கு அதிக தோஷம் இருந்தால், அந்த வீட்டில் துர்வாடை வீசும். என்னதான் சென்டு போன்ற நறுமண பொருட்களை உபயோகித்தாலும் அந்த வாடை போகாது. தோஷம் நீங்கினால்தான் துர்வாடை போகும்.

அதனால் கடல் தண்ணீரை சிறிது எடுத்து, ஒரு பக்கெட் தண்ணீரில் ஊற்றி வீட்டை கழுவி விட்டாலோ அல்லது துடைத்து விட்டாலோ தோஷங்கள் போகும். கடலில் குளிக்க தெரியாதவர்கள், கடல் நீரை கொஞ்சம் வீட்டிற்கு கொண்டு வந்தும் குளிக்கலாம்.

அப்படி இல்லையென்றால் குளிக்கும் போது ஒரு பக்கெட்டில் கைபிடி அளவு கல் உப்பை எடுத்து தண்ணீரில் கரைத்து குளித்தாலும் உடலில் இருக்கும் ஏழு சக்கரங்களும் பலப்படும்.

ஸ்ரீராமர் பார்த்திப லிங்கத்தை, தானே உருவாக்கி, அந்த லிங்கத்திற்கு கடல் நீரால் அபிஷேகம் செய்தார்.

“ஏன் கடல் நீரில் அபிஷேகம் செய்கிறீர்கள்.? என்று வானர வீரர்கள் கேட்டதற்கு, கடல் நீரே விசேஷமானது” என்றார் ஸ்ரீராம பிரபு.


ஆன்மிகமலர் மெயில் புக்


ஆன்மிகமலர் மெயில் புக்



தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 31060101001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com

# தாம்பூலமும் அதன் ரகசியமும்

பழம்தமிழர் மரபாகட்டும் இந்திய பண்பாடாக இருக்கட்டும் அவை எல்லாமே காரண காரியத்தோடு உருவாக்க பட்டது தான் முடி வெட்டுவதில் இருந்து. மன்னர்கள் முடிசூடுவது வரை கடைப்டிக்கபடும் சடங்குகளில் பல்வேறு வாழ்க்கை தத்துவங்கள் அடங்கி உள்ளன வாழ்க்கையை நெறிபடுத்தும் தத்துவ முறைகள் மட்டுமல்லாது உடலை வளப்படுத்தும் நல்ல காரியங்கள் கூட அதில் அடங்கி இருக்கும்.

தாம்பூலம் தரிப்பதில் கூட இப்படி ஒரு நல்ல விஷயம் அடங்கி இருக்கிறது இது வெற்றிலை போடும் நிறைய பேருக்கு தெரியுமா என்பது நமக்கு தெரியாது பொதுவாக வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு ஆகியவற்றை சரியான விகிதத்தில் கலந்து சுவைக்கும் போது அந்த சுவை உடலையும் மூளையையும் சுறுசுறுப் படைய செய்கிறது அதே நேரம் இதயத்தையும் வலுப்படுத்துகிறது.



மனித உடலுக்கு நோய் ஏன் வருகிறது என்பதற்கான கார ணத்தை ஆயுர்வேதம் சொல்லும் போது உடம்பில் உள்ள வாதம் பித்தம் சிலேத்துமம் போன்றவைகள் சரியான விகிதத்தில் இல்லாமல் கூடும் போதோ குறையும் போதோ நோய் வருகிறது. என்று சொல்கிறார்கள் இது முற்றிலும் சரியான காரணமாகும் இந்த மூன்று சத்துக்களும் சரியான கோணத்தில் உடம்பில் அமைந்துவிட்டால் நோய் வராது என்பதை விட நோயை எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடம்பிற்கு வருகிறது இந்த மூன்று நிலைகளையும் சரியானபடி வைக்க தாம்பூலம் உதவி செய்கிறது.

பாக்கில் இருந்து கிடைக்கும் துவர்ப்பு பித்தத்தை கண்டிக்க கூடியது சுண்ணாம்பில் உள்ள காரம் வாதத்தை போக்கவல்லது வெற்றிலையில் உள்ள உரைப்பு கபத்தை நீக்கி விடும். இப்படி பார்த்தால் தாம்பூலம் போடுதல் என்ற ஒரே பழக்கத்தில் உடம்பில் உள்ள மூன்று தோஷங்களையும் முறைபடுத்தும் நிலை அமைந்து விடுகிறது. இதுமட்டுமல்லாது தாம்பூலத்தோடு சேர்க்கும் ஏலம், கிராம்பு, ஜாதிபத்திரி போன்றவைகள் வாயில் உள்ள கிருமிகளை மட்டுபடுத்துகிறது. ஜீரண சக்தியை அதிகரிக்கவும் செய்கிறது.

ஆக மொத்தம் தாம்பூலம் தரிப்பதில் இத்தனை நல்ல விஷயங்கள் அடங்கி உள்ளன அதனால் தான் நமது விருந்துகளில் வெற்றிலைக்கு முக்கிய பங்கு கொடுக்கபடுகிறது. தாம்பூலம் போடுவது எந்த இடத்தில் கெட்ட பழக்கமாக மாறுகிறது என்றால் வெற்றிலை பாக்கு சுண்ணாம்போடு புகையிலையும் சேரும் போது தீய பழக்கமாக மாறி விடுகிறது. நமது முன்னோர்களின் தாம்பூலத்தில் புகையிலை கிடையாது. புகையிலை என்பது இடையில் சேர்க்க பட்ட தீய பழக்கமாகும்.

இப்போது வயதானவர்களுக்கு இருக்க கூடிய அபாயங்களில் மிக முக்கியமானது எலும்பு முறிவு ஆகும் சிறிதளவு முறிவு ஏற்பட்டு விட்டாலும் முதுமையின் காரணமாக பெரிய பிரச்சனைகளை ஏற்படுத்தி விடுகிறது.

பல நேரங்களில் சாதாரண எலும்பு முறிவே மரணத்தை பரிசாக தந்து விடுகிறது. ஆனால் பத்து இருபது வருடங்களுக்கு முன்பு முதியவர்களுக்கு எலும்பு முறிவு என்பது அவ்வளவு சீக்கிரம் ஏற்படாது இதற்கு காரணம் அவர்களிடமிருந்த தாம்பூலம் தரிக்கும் பழக்கமே ஒரு குறிப்பிட்ட அளவு சுண்ணாம்பு சத்து உடம்பிற்கு நேராக கிடைக்கும் போது எலும்புகள் வலுப்பட்டு விடுகிறது.

தாம்பூலம் போடுவதற்கென்று தனிப்பட்ட நெறிமுறையே நமது முன்னோர்களால் வகுக்க பட்டிருக்கிறது. காலையில் சிற்றுண்டிக்கு பிறகு போடும் தாம்பூலத்தில் பாக்கு அதிகமாக இருக்க வேண்டும்.

காரணாம் மதிய நேரம் வந்து வெப்பம் அதிகமாகும் போது உடம்பில் பித்தம் ஏறாமல் அது பாதுகாக்கும். அதே போல மதிய உணவிற்கு பிறகு சுண்ணாம்பு சத்து அதிகம் எடுத்துகொள்ள வேண்டும் அது உணவில் உள்ள வாதத்தை அதாவது வாயுவை கட்டுபடுத்தும். இரவில் வெற்றிலையை அதிகமாக எடுத்துகொண்டால் நெஞ்சில் கபம் தங்காது இந்த முறையில் தான தாம்பூலம் தரிக்க வேண்டும் என்பது நமது முன்னோர்களின் கட்டளை இதை மீறும் போது தான் சிக்கல் வருகிறது.



## கணபதி ஸ்துதி

அருகம் புல்லில்
ஆனந்தமானாய் நீ யப்பா
ஆற்றல் அளிப்பாய் யப்பா
அருகிருந்து காப்பாயப்பா
இன்னல் அகற்று வாயப்பா
இடர் தீர்த்திட வருவாயப்பா
ஈடேற்றிட வருவாய்யப்பா
உன் பிள்ளை நானப்பா பிள்ளையாரப்பா
உடனிருந்து
ஊக்கமளிக்க வருவாய்யப்பா
எருக்கம்பூ அணிந்தாய்யப்பா
எங்கும் அமர்ந்தாய்யப்பா வாழ்வில்
ஏற்றம் அளிப்பாய்யப்பா
ஐயம்மில்லையப்பா
ஒரு நிலையடன் ஒன்றிநோ மப்பா
ஓம்காரநாதனப்பா
ஒவ்வைக்கு அருளிய அப்பனே
அருள்வாய் ! அருள்வாய் !

## திருச்செந்தூர்

கடல் அலைபோல்
மன அலைகள்
தத்தளிக்கும் நேரத்தில்
செந்தில் ஆண்டவா
கந்தா
கடம்பா
கார்த்திகேயா
கருணை உள்ளம்
கொண்ட
வேலாயுதா
உன் நாமத்தை
இடைவிடாமல் கூறுவோம்

– கல்பனாராமன், கேரளா,
போன்: 9495708892

# நீ நலமோடு இருக்கிறாயா...?

ஐம்பது பேர் நடமாடுகிற அங்காடித் தெருவிலிருந்து, ஒவ்வொரு மனிதனாக உற்றுப் பார்க்கிறேன். அவனவன் முகத்தில், ஆயிரமாயிரம் இருள் வடிவம் தெரிகிறது. வெட்டப்பட்ட ஆடுகளை போல, மனதையும் புத்தியையும் தொங்கப் போட்டுக் கொண்டு நடமாடுகிறவர்களை மட்டுமே என்னால் காணமுடிகிறது. ஒரு மனிதனை நிறுத்தி, நீ நலமோடு இருக்கிறாயா என்கிறேன். உச்சு கொட்டிக்கொண்டு விலகிப் போகிறான். வேறொருவனை கேட்கிறேன். அவன் விரக்தியாக சிரிக்கிறான். இன்னொருவன் நலமா? அது எப்படி இருக்கும்? என்று என்னையே திருப்பிக் கேட்கிறான்.




எவனும் தான் சுகமாக இருப்பதாக கூறவில்லை. ஆனால், அனைவரும் ஒட்டு மொத்தமாக அடுத்தவர்கள் சுகமாக இருப்பதாக ஓங்கிய குரலில் கூறுகிறார்கள். நிச்சயம் அந்த குரல் அன்பின் வெளிப்பாடாக இல்லை. பொறாமையின் கூக்குரலாகவே இருக்கிறது. தன்னைத் தவிர அனைவரும் நன்றாக இருப்பதாக நினைக்கிறான். மனித கூட்டம் சந்தோசம் அடைவதற்கான வழி மிகவும் சுலபமானது. மிகவும் அருகில் இருப்பது என்பதை அறிந்து கொள்ளவில்லை. வானத்தின் மீதோ இமயமலை சிகரத்தின் மீதோ இன்பம் என்ற கொடி பறப்பதாக நினைக்கிறார்கள்.

ஒரு ஆடை அழுக்காக இருக்கிறது. புழுதியின் மேலும், சேற்றின் மீதும் விழுந்து கிடந்ததாலும், வியர்வையில் நனைந்து நனைந்து உப்புக் காய்ச்சி போனதாலும், மொட மொடப்போடு நாற்றம் வீசி மூலையில் கிடக்கிறது. அந்த ஆடை அதை சுத்தபடுத்த வேண்டும் புத்தம் புதியதாக மாற வேண்டும் பார்ப்பவர் கண்களைப் பறிக்க கூடியதாக ஆக்கவேண்டும் அதற்கு என்ன செய்யவேண்டும்?

தண்ணீரில் ஊறவைத்து பெரிய கட்டையால் ஓங்கி ஓங்கி அடித்து பாறையின் மீது பலம் கொண்ட மட்டும் மோதி, கைகளாலும் கால்களாலும் களைத்துப் போகும்வரை துவைத்து பிழிந்து எடுத்தால் அழுக்கு போய்விடுமா? நிச்சயம் போகாது. ஒரு நாள் இரண்டு நாள் சேர்ந்த அழுக்காக இருந்தால் ஒருவேளை போய்விடக் கூடும். ஆனால் இது ஜென்மாந்திர அழுக்கு. அவ்வளவு சுலபத்தில் போகாது. ஒரு வேளை நாம் துவைக்கும் வேகத்தில் ஆடை கிழிந்து கூட போகலாம். அதற்கு வாய்ப்பு உண்டே தவிர முற்றிலும் அழுக்கு இல்லாமல் போக வாய்ப்பே இல்லை.

அப்படி என்றால், காலங்காலமாக அந்த ஆடை மூலையில் கிடக்க வேண்டியது தானா? உபயோகம் இல்லாமலே அது நைந்து போக வேண்டியது தானா? அவ்வளவு தான் அதன் வாழ்க்கையா? அதை அப்படியே கைவிட்டு விட வேண்டியது தானா? இல்லை. நிச்சயம் இல்லை. அதன் கதை முடியவில்லை. சரியாக முயற்சித்தால், அதன் கதை இனிதான் ஆரம்பமாகும். அழுக்கை நீக்க செய்த முயற்சிகள் அபாரம் தான். ஆனால் அத்தனையும் சரியான முயற்சியா என்பதை ஆராய வேண்டும். தவறான பாதையில் பயணத்தை நடத்திவிட்டு போக வேண்டிய பட்டணம் போக முடியவில்லையே என்று வருத்தப்படுவது மூடத்தனம்.

அழுக்கை அகற்றுவதற்கென்றே சலவைக் கட்டி என்ற ஒன்று உண்டு. அதை பயன்படுத்தி இருந்தால், கடின முயற்சிகள் இல்லாமலே உடலை வருத்தி துடிப்பது இல்லாமலே, அழுக்கு போகுமா, போகாதா என்று ஏங்குவது இல்லாமலே சில நிமிடங்களில் அழுக்கு ஓடி இருக்கும். ஆனால், அதை நாம் செய்யவில்லை. செய்ய கூடாததை செய்கிறோம். அதனால் பெறக்கூடாததை பெறுகிறோம். வாழ்க்கையில் துன்பம் என்பதும் இப்படித்தான் வந்து சேர்கிறது. அச்சாணி இல்லாத வண்டியில் பயணம் செய்து விட்டு ஐயோ பாதி வழியில் விழுந்து விட்டேனே என்று அழுது புலம்புகிறோம். இதில் யாருக்கு என்ன பலன்?

துணி வெளுக்க மருந்து இருப்பது போல, நமது மனம் வெளுக்க மருந்திருக்கிறது. அந்த மருந்து இறை நம்பிக்கை என்ற மருந்து. உன்னை நீ இமயமலை அளவு நம்பலாம். என்னால் ஆகாதது எதுவுமே இல்லை என்று நீ கர்ஜனை செய்யலாம். மனித சக்தியே இறுதியானது என்று பகுத்தறிவு பேசலாம். ஆனால், அவைகளெல்லாம் ஒரு எல்லையோடு நின்று விடும் அந்தகார இருட்டில் நீ தனிமையில் இருக்கும் போது, உன் பலம் எல்லாம் துரும்புக்கு இணையானது என்பதை கண்ணெதிரே காண்பாய். அப்போது மட்டும் நீ சாய்ந்து கொள்ள கடவுள் நம்பிக்கை என்ற தோள் உனக்கு கிடைத்தால் உன் சொந்தபலம் இன்னும் கூடும்.



மரணம் வந்து வாசல் கதவை தட்டுகின்ற போதும், மரண தேவன் நம்மை அழைத்து சென்றுவிட்ட போதும், மீண்டும் அம்மாவின் கருவறைக்குள் நாம் தவத்தை துவங்கிய போதும், இறைவன் மட்டுமே உன்னோடு கூட வரும் ஒரே ஒரு சொந்தம் என்பதை நீ உணர்ந்தால், உன்னை பற்றி முழுமையாக அறிந்தது இறைவன் ஒருவன் மட்டுமே என்று நீ புரிந்து கொண்டால் நிரந்தரமான ஆனந்தம் எது? கானல் நீர் போல் மறைந்து ஓடும். சந்தோஷம் எது என்பதை தெளிவாக தெரிந்து கொள்வாய்.

இந்த பிறவியில் உனது தகப்பன் அடுத்த பிறவியில் யாரோ! உன்னை பெற்றவள் இப்போது இவள். அடுத்து உன்னை பெறப்போவது யார்? அண்ணன் தம்பி, வாழ்க்கைத் துணை, வாரிசுகள் அனைத்துமே இத்தோடு சரி. அடுத்தடுத்த பிறவியில் அவர்கள் யாரோ? நாம் யாரோ? ஆனால், எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனைப் பிறவியிலும் இறைவன் ஒருவனே மாறாத உறவு. இதை புரிந்து கொண்டால் வாழ்க்கையை வெளிச்சமாக்கி விடலாம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

# வாழ்க்கையை இனிமையாக்கும் பித்ரு புஜை

மறைந்த நமது முன்னோர்களை வழிபடுவது என்பது இந்து மத வழக்கில் உள்ள மிகப்பெரிய விஷயமாகும். இறந்தவர்களை தெய்வத்துடன் ஒன்றி வழிபடுவதால் முன்னோர்களின் ஆசி குடும்பத்தை காக்கும் என்று சாஸ்திர சம்பிரதாயங்களில் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

முன்னோர் வழிபாடு என்பது உலகலாவிய அளவில் மற்ற மதங்களும் பின்பற்ற காரணம் இந்து மதமே.

மற்ற மதங்கள் மனிதன் வாழும்போது செய்யக் கூடிய காரண காரியங்களை மட்டும் கூறுவதாக அமைந்துள்ளது. ஆனால் இந்து மதம் வாழ்ந்த பின்னும் நடைபெறும் பல்வேறு நிலைகளை விளக்கமாக பல்வேறு புராணங்கள் இதிகாசங்களில் மிகத் தெளிவாக கூறியுள்ளது. இவற்றிற்கெல்லாம் மிகத் தலையாயதாக விளங்குவது கருடப்புராணம் ஆகும்.

ஒரு மனிதன் செய்யக் கூடாதது, செய்யக் கூடியது, செய்வதனால் ஏற்படும் பலாபலன் போன்றவற்றை மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளது.

அந்த புராணத்தில் முன்னோர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் மிகத் தெளிவாக கூறியுள்ளது. (ஒவ்வொருவரும் அவசியம் படித்து தெரிந்து கொள்ள வேண்டிய புராணங்களில் முதன்மையானது கருடப்புராணம், மனித ஆசாபாசங்கள், கோப தாபங்கள், பெண், பொன் மோகங்களால் விளையக்கூடிய தீவினைகளை அக்குவேறு ஆணிவேறாக பிரித்து காட்டியுள்ள அற்புத புராணம்)

குடும்பத்தில் நிரந்தர வறுமை, சண்டை, சச்சரவு, குழப்பமான மனநிலை.... இன்னும் பல பிரச்சனைகளுக்கு மிக முக்கிய காரணமாக இருப்பது, நமது முன்னோர்வழிபாட்டை நாம் செய் யாமல் விட்டிருப்பதுதான் என்று பல் வேறு ஜோதிட நூல்களும், ஜோதிடர்களும் கூறுகின்றனர். இந்தவகையில் நாம் அவசியம் கடைபிடிக்க வேண்டிய ஒருசில நடைமுறைகளில் முக்கியமானது அமாவாசை தினமாகும். மாதம் தோறும் வரும் ஒவ்வொரு அமாவாசையன்றும் நம் முன்னோர்களுக்கு பித்ரு பூஜை செய்து வந்தால் மேற்கண்ட பல்வேறு பிரச்சனைகள் எளிதாக மறைந்து விடும்.

என்னதான் திறமையும், உழைப்பும் இருந்தாலும், தெய்வத்தின் ஆசியும், முன்னோர் ஆசியும் தான் நமது திறமைகளையும், உழைப்பையும் செம்மைப்படுத்தும். பலனைத் தரும். அந்த வகையில் முன்னோர் வழிபாடு தெய்வ வழிபாட்டிற்கு இணையாக நமது முன்னோர்கள் கடைபிடித்துள்ளனர்.

ஒவ்வொரு சாஸ்திரத்தை ஏற்படுத்தியவருக்கும் ஆச்சாரியர் என்று பெயர். ஆச்சாரியர் என்பவர் சாஸ்திர அர்த்தங்களை பிறருக்கு விளக்கிக் கூறி, தானும் அவைகளின்படி செயல்பட்டு மற்றவர்களையும் அந்த ஆசாரங்களில் நிலை நிற்கச் செய்பவர். நம்முடைய கர்மாக்களைக் கடவுளுக்கு அர்பணம் செய்வதன் மூலம் சித்த சுத்தி ஏற்பட்டு, வாழ்க்கையின் ஒரே குறிக்கோளான கடவுளை அறிவதற்கு வழி காணலாம். முன்னோர்களுக்குக் குறிப்பிட்ட திதி, அமாவாசை நாட்களில் தீர்த்தக் கரையில் ஸ்ரார்த்தம் செய்வார்கள். காரணமில்லாமல் எந்த வழிபாட்டையும் நம் முன்னோர் உருவாக்கவில்லை. இது ஸ்ரத்தை என்ற சொல்லில் இருந்து உருவானது. தந்தையை நினைவுகூர்ந்து ஒரு மகன் இதைச் செய்கிறான். இதை அவனுடைய மகன் பார்க்கிறான்.

ஓ... நம் தந்தை அவரது தந்தையை இறந்த பிறகும் மதிக்கிறார். அப்படியானால் உயிரோடிருக்கும் இவரை எந்த அளவுக்கு மதிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றும். இதனால் குடும்பம் ஒற்றுமையாக இருக்கும்.

சிரார்த்தம் என்ற வார்த்தைக்கு சிரத்தையுடன் மன ஒருமைப்பாட்டுடன் செய்யும் காரியம் என்பது பொருளாகும். சிரார்த்தம் என்பது முன்னோர்களை வழிபடல், முதியோரை மதித்தல், தன் பிறவிக்கும், வம்சத்திற்கும் முதல்வர்கள் ஆனவர்களைப் போற்றுதல் இது சிரார்த்தம் என்பதற்கான வெளிப்படையான பொருள்.

ஆர்வமில்லாமல் செய்யப்படும் எதுவும் அது தவமாக இருந்தாலும் கூட எந்தப் பயனும் இல்லை என்று கீதை சொல்லுவதும் சிரார்த்தத்தின் முக்கியதுவத்தை உணர்ந்தேயாகும். நன்மை தரக்கூடிய சிரார்த்தம் தர்ப்பணம் முதலிய பித்ரு காரியங்கள் யாரை உத்தேசித்து செய்கிறோமோ அவர் பித்ரு உலகில் இருக்கலாம். அல்லது தேவ உலகில் இருக்கலாம். ஏன் மனித உலகில் நமக்குப் பக்கத்திலலேயே கூட இருக்கலாம். அவர்களின் நிலை தாழ்ந்ததாகவோ உயர்ந்ததாகவோ இருக்கலாம். நமது முன்னோர்களான அவர்களுக்கு நம்மால் செய்யப்படும் சிரார்த்தம் அவர் உயர்ந்த நிலையில் இருந்தால் ஆசியாக நமக்குக் கிடைக்கும். தாழ்ந்த நிலையில் இருந்தால் அவரின் நிலை உயர உதவும். மறுபிறப்பு எடுத்திருந்தால் அவர்களின் இக உலகத் துன்பம் தீர உதவும். அதாவது, பித்ரு காரியங்களை ஒவ்வொருவரும் செய்ய வேண்டுமென வலியுறுத்துகிறார்.

ஆயுள் முடிந்து போன நமது முன்னோர்கள் பரவுலகத்தில் அல்லது பித்ரு உலகத்தில் வாழ்கிறார்கள். அவர்கள் வசு மித்திரர்கள், ஆதித்யர்கள் என்ற பிரிவில் அடங்குவார்கள். உடல் அழிந்தாலும் பிரேத நிலையில் குறிப்பிட்ட காலம் இருந்து தங்களது வாரிசுகள் செய்யும் நற்கா்மங்களால் பிரேத தோஷம் நீங்கப் பெற்றுத் தங்களது பூரண அன்பையும் நம் மீது காட்டலாம்.

இறந்து போன ஒருவருக்காக அவரது மைந்தன், பேரன், சகோதரன் முதலானோர்களும் அவர்களின் சுய கோத்திரத்தில் பிறந்த ஏழு தலைமுறையினரும் கோத்திரம் மாறிய பெண் வழி வாரிசுகளும் சிரர்த்தம் செய்யலாம். நித்தியம், நைமித்தியம், காமிகம் என சிரார்த்தம் மூவகைப்படும். மாத அமாவாசையில் செய்கின்ற தர்ஸ்ர சிரார்த்தம், மகாளய பட்சத்தில் செய் யும் ஆத்திக,பிராத்தாதிக சிரார்த்தம்,தினசரி செய்கின்ற பிரம்ம யக்ஷ தேவர்ஷ, பித்ருதர்ப்பண பித்ரு க்ரியம் முதலியவை நித்ய சிரார்த்த வகையாகும். மாதப் பிறப்பு, கிரகணம் முதலிய புண்ணிய காலங்களில் செய்கின்ற தர்ப்பணம், விவாகம் மற்றும் சுப காரியம் நிகழும் போது செய்யப்படும் மாத்திமுக சிரார்த்தம், சௌவுடிககரணத்தன்று செய்யும் ரகோத்தரம் பார்வன சிரார்த்தம், பூன மாசி, காணு மாசிகங்கள் சோத கும்பக முதலியவைகள் நைமித்திக சிரார்த்தம் ஆகும். வருடப்பிறப்பு, புனித யாத்திரை, புண்ணிய தீர்த்த கரைகள் போன்றவற்றில் செய்யப்படுவது காமிக சிரார்த்தமாகும்.

இந்த பித்ரு தோஷம் செய்ய அமாவாசை நாட்கள் மட்டுமே உகந்தது, மேலும் இறந்தவர்களின் திதியை கணக்கிட்டு அன்றைய தினமும் பித்ருதர்ப்பணம் கொடுத்து வழிபடுவது மிகச் சிறந்தது. தமிழ் வருடத்தில் ஆடி மாதமும் புரட்டாசி மாதமும் வரும் அமாவாசையன்று பித்ரு தர்ப்பணத்திற்கு மிக உகந்த தினங்களாகும்.

இன்னல்கள் தீர, இக–பர உலகில் மேன்மை அடைய, இறைவழிபாட்டுடன் நமது பித்ரு வழிபாட்டையும் செய்யும்போது நமது வழிபாட்டின் நோக்கம் நிறைவேறவும், குடும்பத்தில் நிலவும் பல்வேறு சிக்கல்கள் தீரவும் பித்ருக்கள் நமக்கு உறுதுணையாக இருப்பார்கள்.



# மறந்து போன "சனி நீராடு...."

பெரியவாளுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு, ரொம்ப கஷ்டப்பட்டு எழுந்தார் ஒரு பக்தர்!

நடு முதுகுத்தண்டில் தாங்க முடியாத வலி!

"நடு முதுகுல... பயங்கர வலி பெரியவா..! எல்லா வகை... வைத்தியமும் பாத்தாச்சு! ஒண்ணும் கேக்கல! பணம் கரைஞ்சது தான் மிச்சம்! வலி போகல!...பெரியவாதான் இத.. குணப்படுத்தணும்" என்றார்.

அவர் முகத்தில் வேதனை தெரிந்தது.

உடனே பெரியவாள் "முன்னெல்லாம்.....செக்குல ஆட்டின நல்லெண்ணெய் தேச்சு, கொஞ்சம் ஊற வச்சு, வெந்நீர்ல... சீக்காயோ, அரப்போ தேச்சு குளிப்பா! இப்போ அவசர யுகம்! எண்ணெய் தேச்சு குளிக்கவே டைம் இல்ல.! "சனி நீராடு"ன்னு... ஸ்கூல்ல படிக்கறதோட செரி. (இப்போ அந்த படிப்பும் இல்லை)

அத... follow பண்ணணுங்கறது மறந்து போச்சு! அரப்பு, சீயக்கா பொடிக்கு பதிலா, தலைக்கு தேச்சுக்க என்னென்னமோ வந்திருக்காம்....! எல்லாம் கெமிக்கல்ஸ் சேந்தது.! பின்னால.... கெடுதின்னு தெரிஞ்சாலும், அதையேதான் வாங்கறா...! போகட்டும் போ! நீ இனிமே.... ரெகுலரா.... எண்ணெய் தேச்சுண்டு, வெந்நீர்ல குளி! மிளகு ரசம், பெரண்டை துவையல் பண்ணி சாப்டு..! என்ன?" என்றார்.

"கட்டாயம் பெரியவா சொன்னபடியே பண்றேன்" என்றார் அந்த பக்தர்.

மூணு மாதம் கழித்து வந்தார் முதுகுவலிக்காரர். வலி போய்விட்டதாம்.!

எண்ணெய் தேச்சு வெந்நீர்ல குளியல், மிளகு ரசம், பெரண்டை துவையல் இந்த மூன்றின் சேர்க்கை பற்றி யார் ஆராய்ச்சி பண்ணினால் என்ன, பெரியவா சொன்ன சிம்பிள் வைத்தியம் கை மேல் பலன் கொடுத்திருந்தது.

பெரியவா திருவாக்கிலிருந்து சில health tips...

வீடுகள்ல, மூணு எண்ணெய் எப்பவும் இருக்கணும்......

1. நல்லெண்ணெய் விளக்கேத்த, சமையல் பண்ண, எண்ணெய் தேச்சு குளிக்க;

2. விளக்கெண்ணெய் வருடத்தில் ரெண்டு தரம், காலைல வெறும் வயித்துல குடிச்சா..... வயிறு செரியா இருக்கும். வயித்துவலி இருந்தா, கொஞ்சம் விளக்கெண்ணெய் எடுத்து தொப்புளை சுத்தி நன்னாத் தடவிண்டா செரியாப் போய்டும். சூடு தணியும். பாதத்ல வெடிப்புகிடிப்பு, புண்ணு இதெல்லாம் வராது.

3. வேப்பெண்ணெய் வேப்பெண்ணையை தெனமும் கை,கால், முட்டிகள்ல தடவிண்டா, முட்டி வலி வரவே வராது.

[பெரியவாளும் தினமும் கை, கால் முட்டியில், வேப் பெண்ணெய் தடவிக்கொண்டு குளிப்பாராம்]

தெனமும் குளிச்சதும், ரெண்டு காலையும், பாதத்தையும் நன்னாத் தொடச்சுக்கணும். நம்ம ஒடம்புல, காலுதான் முக்யமான பாகம். பாதத்தை நன்னா கவனிச்சுண்டா, ஒடம்பும் நன்னா இருக்கும். ராத்திரி படுத்துக்கறதுக்கு முன்னாடி, பாதத்தை நன்னா அலம்பிண்டு, ஈரம் போகத் தொடச்சிண்டு படுத்துக்கணும்.

அந்த காலங்கள்ல, வெளியிலேர்ந்து வந்தா... குடிசைவாசிகள் கூட, வாய் கொப்பளிச்சுட்டு, கைகால், குதிகால்.... அலம்பிண்டு தான் வீட்டுக்குள்ளயே நொழைவா!

இப்போ...? செருப்பே.... வீட்டுக்குள்ளதான கெடக்கு! பின்ன...ஏன் வியாதி வராது? என்று கூறுகிறார் மஹா பெரியவாள்.








## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**


தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

Talks With Thali

## வங்கிக் கணக்கை விட உங்கள் உடலங்கத்தின் கணக்கை சரிபாருங்கள்

புழுங்கலரிசியின் வடி கஞ்சி உடலுக்கு மிக மிக நன்மைத் தரும். பதமான கஞ்சிபில் பனங்கற்கண்டு கலந்து சாப்பிட வறட்டு இருமல் தணியும் என்பர்.

உதவாது என்று எதை கீழே ஊற்றுகிறோமோ அதில்தான் நம் உடலுக்குத் தேவையான அனைத்தும் இருக்கிற்து.

குக்கரில் செய்யும் சாதம் 2ம் பட்சமே, வடிசாதமே மிக மிக உன்னதமானது. அதைக் காட்டிலும் உன்னதம் மிதமான தண்ணீர் ஊற்றி அதிலேயே சாதத்தை வடிக்காதபடி சுண்டச் செய்து அப்படியே எடுத்து உண்பது.

இதன் பழைய சாதத்தை ஒருதுவையலோடு (அ) ஊறுகாய், சிறு வெங்காயத்தோடு சேர்த்துண்ண கோடைக்காலம் எல்லோர்க்கும் இதமே.

ஒரு சில வேதப் பாடசாலையில் காலை வேளையில் பழைய சாதமே ஆகாரமாக தரப்படுகிறது. அது அதிகப்பட்சம் பச்சரிசியாகவே இருக்கும்.

அரிசி உணவை யாரோ சொல்லி விட்டனர் என்பதற்காக உடனே ஒதுக்கி வைத்து விடாமல் ஒருவேளை சாதம், ஒரு வேளை கோதுமை, ஒருவேளை கஞ்சி என்பதாய் வைத்துக் கொள்ளுங்கள்.

முதலில் வயிறு புடைக்க சாப்பிட எண்ணுவதும், அதையே நோய் அறிகுறி தெரிந்ததும் வயிற்றை காயப்போட்டுத் தள்ளி வைப்பதும் சரியா?

வீதிக்கு ஒரு வைத்தியர் இருக்கும் காலமாகி விட்டது. நாம் எதை சாப்பிட வேண்டும் என்பதை இன்றைய மருத்துவர் பட்டியலிடுவதற்கா நாம் மெத்தப் படித்தோம்.

உணவிற்கு ஒரு நேரம் ஒதுக்குங்கள் என்று சொல்வது மிகத் தவறு. உங்கள் எதிர்கால நலத்திற்கு ஒரு நேரம் தாருங்கள்.

வங்கிக் கணக்கை விட உங்கள் உடலங்கத்தின் கணக்கை சரிப்பார்த்து வையுங்கள்.

## இறைவன் மீது பழி சுமத்தி விட்டு தன்னைத் தியாகியாக்கிக் கொள்கிறான்

உயர்வு என்பது நம் வசம் .நம் உயர்வை தாழ்வாக்கிக் கொள்வதும் நம் வசமே. ஈசன் நம்மை உயர்த்திப் பார்க்கவே எண்ணுகிறான்.

பரந்த நோக்குடைய பரமன் நம்மை தன் நிலைக்கு உயர்த்த எண்ணுகிறான். குறுகிய எண்ணமே நிரம்ப பெற்றுள்ள மனிதன் கீழ்மையையே அதிகம் விரும்புகிறான்.

தனது விருப்பப்படி கீழான வாழ்வு வாழ விரும்புபவன அதை வாழ்ந்து முடித்தப் பின் வரும் துன்பத்தை ஏற்க வேண்டாமா?. கீழான வாழ்வு வாழ விரும்பிய போது அதை அப்படியே வாழ விட்டவன் இறைவன் தான் என்பதை அப்போது அவன் ஒப்புக்கொள்வதில்லை.

அதைத்தானே தேர்ந்தெடுத்து தானே சுகமாய் வாழ்ந்து விட்டதாய் கருதுகிறான். அதிலிருந்து மீட்டு அவனை மேம்படுத்த வரும் ஈசன் அவன் முன்பு வாழ்ந்த வாழ்க்கைக்கான சம்பளத்தைத் தந்து விட்டு ; இனி வாழப்போகும் வாழ்க்கைக்கான திட்டத்திற்கு அடிக்கல் நாட்ட எண்ணுகிறான்.

இவனோ தான் வாழ்ந்த வாழ்க்கைக்கான சம்பளம் துன்பமாய் இருப்பதால் இது இறைவனின் விளையாட்டு என்று மிக சாமர்த்தியமாய் இறைவன் மீது பழி சுமத்தி விட்டு தன்னைத் தியாகியாக்கிக் கொள்கிறான்.

பரமன் நம்மை செம்மைப்படுத்தியேத் தீர வேண்டும் எனும் வைராக்கியம் கொண்டவன். அதனால் செதுக்கி, செதுக்கி நம்மை செம்மைப்படுத்தியேத் தீருவான்.

அவன் நமது தாய், தந்தை அல்ல. பாசத்தாலோ, வெறுப்பாலோ விட்டு விட்டு செல்வதற்கு . அவர்களுக்கும் தாயானவன். எல்லோர்க்கும் மேலானவன். கண்டித்து, தண்டித்து கர்ம வினை ஒழித்து தன் கண்ணாய் காப்பவன். தன் கடமையிலிருந்து தவறாதவன். காத்தேத் தீருவான்.

- Thali, Ph:9600999279





அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# மிருக பலமும் தேவ குணமும் கொண்ட வராகி

சப்தமாதாக்களில் ஒருவளும் வராக மூர்த்தியின் தங்கையும் 64 யோகினிகளில் ஒருவளும் உன்மத்த பைரவரின் துணைவியுமான வலிமை மிக்கவள் ஆவாள்.

பன்றி முகத்துடன் காட்சி தரும் அன்னை வாராகி, பராசக்தியின் படைத்தலைவி ஆவாள்.

பராசக்தியின் முக்கிய அமைச்சரும் இவளே.

வாராஹும் எனப்படும் பன்றியின் முகத்தை கொண்டதனால் வாராகி என்றழைக்கப்படுகிறாள்.

இவள் திருமால், அம்பிகை மற்றும் சிவன் ஆகிய மூன்று கடவுளரின் அம்சம் ஆவாள். எருமையை வாகனமாக கொண்டவள்.

பெண் தெய்வம் ஆதலால் அம்பிகையின் அம்சம், வாராஹ முகம் கொண்டதனால் திருமா லின் அம்சம், மூன்று கண்களை கொண்டதனால் சிவபெருமானின் அம்சம் ஆவாள்.

எதையும் அடக்கும் வல்லமை உடையவள்.

சப்தமாதர்களில் மிகவும் வேறுபட்டவள்.

பலத்தில் மிருக பலம் கொண்டவள்.

குணத்தில் தேவகுணத்தை கொண்டவள்.

தன்னை அண்டியவர்களின் துயரை போக்குபவள். ஊழிக்காலத்தில் உலகை பாதுகாத்த பெருமை இவளையே சாரும்.

திருமாலின் வராக அவதாரத்தில் திருமா லுக்கு பெரிதும் துணை புரிந்த பெருமை இவளுக்குண்டு. இவளின் துணையில்லாமல் வராகமூர்த்தி உலகை தன் கோரைப்பற்களால் தாங்கியிருக்க முடியாது.

தேவர்கள், அசூரர்கள் மற்றும் மனிதர்கள் இவர்களால் போற்றப்படுவள் இவளே.

மிகவும் துடிப்பானவள். மிகவும் வேகமானவள்.

சப்தமாதர்களில் ஐந்தாவதாக தோன்றியவள். கோபத்தில் உச்சம் இவளே.

அன்பு காட்டுவதிலும், ஆதரவு காட்டு வதிலும் இவளுக்கு நிகர் இவளே.

பராசக்தி வாராகியின் துணை கொண்டே 14 உலகங்களையும் வெற்றி கொண்டாள்.

பண்டாசூரனை பராசக்தி வதம் செய்ய துணை புரிந் தவள் இவளே.

எதிரிகளை அழிப்பவள். செய்வினை, கண் திருஷ்டி இவற்றை போக்குபவள். பயத்தினை போக்குபவள். வெற்றியைத் தருபவள்.

எல்லா நலன்களையும் தருபவள். ராசராச சோழனின் வெற்றி தெய்வம் இவளே. இவளை வழிபட்டே ராசராசன் எல்லா நாடுகளையும் வெற்றி கொண்டான். ராச ராசனுக்கு தோல்வியில்லா நிலையை தந்தவளும் இவளே.

நீரின்றி அமையாது உலகு என்பதற்கேற்ப விவசாயத்தின் தெய்வம் இவளே. கலப்பை இவளது ஆயுதம். பஞ் சபூத தலங்களில் நீர் தலமான திருவானைக்கா தலத்தின் நாயகி அகிலாண்டேஸ்வரி வாராகியின் வடிவமே.



ராசராச சோழன் இவளை வழிபட்டே எக்காரியத்தை தொடங்குவான் என்று வரலாறு தெரிவிக்கிறது. தஞ்சை பெரிய கோவில் கட்டுவதற்கு முன்பிருந்தே வாராகி வழிபாடு செய்திருக்கிறான் ராசராச சோழன்.

இன்றும் தஞ்சை பெரிய கோவிலில் ஒரு வழக்கம் உண்டு. பொதுவாக எல்லா கோவில்களிலும் முதலில் விநாயகருக்குத் தான் வழிபாடுகள் நடக்கும்.

ஆனால் தஞ்சை பெரிய கோவிலில் முதலில் வாராகிக்குத் தான் பூசைகள் நடக்கும். சோழர்களின் குலதெய்வம் துர்க்கை. துர்க்கையின் தளபதி வாராகி ஆவாள்.

சோழர்களின் காலத்தில் வாராகி வழிபாடு சிறந்து விளங்கியது. வாராகியின் கலப்பை ஆயுதம் விவசாயத்தினை பெருக்கும் தன்மையுடையது.

இவளின் அருள் பெற்றவர் விவசாயத்தில் சிறந்து விளங்குவர் என்பது எமது அனுபவ உண்மை. காலப்போக்கில் இவளின் வழிபாடு குறைந்து விட்டது. அதனால் தான் விவசாயம் மோசமான நிலையை எய்தியுள்ளது.

வாராகியை வழிபட்ட சோழர்கள் விவசாயத்தில் சிறந்து விளங்கினர். அதனால் தான் சோழநாடு சோறுடைத்து என்றழைக்கப்பட்டது. சோழர்கள் வாராகியின் அருள் கொண்டே போர்களில் வெற்றி வாகை சூடினர். சோழ நாட்டில் மக்கள் எதிரிகளின் தொல்லையில்லாமல் நிம்மதியாக வாழ்ந்தனர்.

இப்போதைக்கு தேவை நாம் ஒவ்வொருவரும் வாராகி வழிபாடு செய்வது தான். வாராகி வழிபாடு செய்வதன் மூலம் நம் பாரத நாட்டினை எதிரிகளிடமிருந்து காக்க முடியும்.

நம் நாட்டினை விவசாயத்தில் முதலிடம் பிடிக்க செய்து உலகிற்கே உணவளிக்க முடியும். வாராகியை வழிபடுவது மிகவும் எளிது. பக்தர்கள் அழைத்தால் ஓடோடி வருவாள்.

வாராகியின் 12 திருப்பெயர்களை அனுதினமும் துதித்தால் எவ்வித துன்பமும் நேராது என்பது உண்மை. எல்லா செயல்களும் வெற்றியுடனே தான் முடியும்.

வாராகியின் 12 திருப்பெயர்கள்:

1. பஞ்சமி 2. தண்டநாதா 3. சங்கேதா 4. சமேச்வரி 5. சமய சங்கேதா 6. வாராகி 7.போத்ரிணி 7. சிவா 8. வார்த்தாளி 9. மகா சேனா 10. ஆக்ஞா 11. சக்ரேஸ்வரி 12. அரிக்நி

வியாபாரத்தில் எதிரிகளை சமாளிக்கவும், குடும்பத்தில் திருஷ்டிகளை போக்கவும் தினமும் வாராகியை வழிபட்டு வந்தால் உடனடி பலன் கிடைக்கும். விவசாயம் சார்ந்த தொழில் புரிபவர்கள் வாராகியை முதன்மை தெய்வமாக வழிபட்டால் அவர்சார்ந்த தொழிலில் சிறந்து விளங்கலாம்.

# தர்பையின் சக்தியும் மகிமையும்

சுப காரியம் அல்லது அசுப காரியம் எதுவாய் இருந்தாலும் அங்கே தர்ப்பை புல்லுக்கு முக்கியமான இடம் உண்டு. கிரகண காலங்களில் சேமிக்கும் உணவு பதார்த்தங்கள் இருக்கும் பாத்திரங்களில் தர்ப்பை புல்லை போட்டு வைத்தால் அவை பாதிப்படையாமல் இருக்கும் என்பார்கள்.

அரிதான இடங்களில் மட்டுமே வளரும் புல் வகை தாவரமான தர்ப்பையில் பலவகைகள் உண்டு.

தர்ப்பையால் பவித்திரம் (மோதிரம் போன்ற வளையம்) செய்து, ஆண்கள் வலது மோதிர விரலிலும், பெண்கள் இடது மோதிர விரலிலும், அணிந்து கொண்டு சங்கல்பம் செய்த பின்னரே எந்த காரியத்தையும் ஆரம்பிப்பார்கள்.

நல்ல நாள் நட்சத்திரம் பார்த்து தான் தரப்பை புல் அரிவார்கள். “தீர்த்தத்தின் மறு ரூபமே தர்ப்பை, தீர்த்தம் வேறு தர்ப்பை வேறல்ல” என்கிறது வேதம். இதற்காக ஒரு புராணக் கதையும் சொல்லப் படுகிறது,

விருத்திராசுரன் என்ற அசுரன், தேவர்களுக்கும், பூலோக உயிர்களுக்கும் பெரும் கொடுமைகள் புரிந்து வந்தான். இதனால் கோபங் கொண்ட தேவேந்திரன். தனது வஜ்ஜிராயுதத்தை பிரயோகித்து அவனை அழிக்க முயன்றும் பலனில்லை, அசுரன் மீண்டும் மீண்டும் தேவேந்திரனை போருக்கு அழைத்தான், திகைத்தான் இந்திரன்.

இதைக் கண்ட பிரம்மா, வஜ்ஜிராயுதத்தை தனது கமண்டல தீர்த்தத்தில் நனைத்து கொடுத்து இப்போது பிரயோகிக்குமாறு கூற தேவேந்திரனும் அவ்வாறே செய்தான்.

தீர்த்தத்தின் மகிமையால் பலம் பெற்ற வச்சிராயுதம் விருத்திராசுரனின் அங்கங்களை கண்ட துண்டமாக வெட்டியது. வஜ்ஜிராயுதத்தின் பலத்துக்கு காரணம் புனித தீர்த்தங்களே என்று அறிந்த விருத்திராசுரன், உலகிலுள்ள எல்லா தீர்த்தங்களுக்கும் சென்று, ரத்தம் வழியும் தனது உடலை நனைத்து தீர்த்தங்களின் புனிதத்தை மாசு படுத்த முயன்றான்.



இதை கண்ட பிரம்மா தீர்த்தங்களை எல்லாம் தர்ப்பை புட்களாக மாற்றி விட்டாராம்.

இதனால்தான் தான் தர்ப்பை விசேடமாக திகழ்கிறதாம்....







# பெண்களை சிறப்பிக்கும் தர்மபுரி கல்யாண காமாட்சியம்மன்

அகிலம் அனைத்தும் அன்னை ஆதி பராசக்தியின் அருளாலேயே உருவானது. அதனால்தான் அன்னையை முன்னிலைப்படுத்தி தாய்நாடு, தாய்மொழி என்று காண்பவை அனைத்தையும் தாய்வடிவாக, மரபாக காண்பது நம் இந்திய திருநாட்டின் பண்பாடு.

தன்னில் பாதி தந்து அர்த்தநாரீஸ்வரர் ஆனார் சிவபெருமான், தன் மார்பில் லட்சுமிக்கு இடம் தந்து ஸ்ரீ வத்ஸன் ஆனார் மஹாவிஷ்ணு, அந்த வகையில் தர்மபுரியில் உள்ள கோட்டை கோவில் ஸ்ரீ கல்யாண காமாட்சி உடனுறை மல்லிகார்ஜீனேஸ்வரர் திருக்கோவில் தாய் வழிப்பாட்டு முறையை தந்து தரணிக்கே முன்னு தாரணமாய் திகழ்கிறது.

சபரிமலையில் ஆண்கள் படிபூஜை செய்வதுப் போல, பிரதிமாதம் அமாவாசை கல்யாண காமாட்சி சன்னதியில் 18 படிகளுக்கு பெண்களே பூஜை செய்வது இத்திருத்தலத்தின் சிறப்பு. பூஜை முடிவில் உற்சவ மூர்த்தியான காமாட்சி அம்மனை திருக்கோவில் முழுவதும் பெண்களே பல்லக்கில் தூக்கி வலம் வருகின்றனர்.

வளர்பிறை பஞ்சமி அன்று ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் செய்கின்றனர், பஞ்சமியில் வராஹி அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகின்றது.

வளர்பிறை அஷ்டமி அன்று திருமணத்தடை நீங்க பெண்களுக்காக சுயம்வர பார்வதி ஹோமம், ஆண்களுக்கு கந்தர்வராஜா ஹோமம், தீர்க்கசுமங்கலி பாக்கியம் வேண்டி சௌபாக்யதுர்கா லட்சுமி நடைபெறுகிறது.

அன்னை காமாட்சி சன்னதி சிவன் சன்னதியை விட பல மடங்கு நெடிதுயர்ந்து உள்ளது. ஒருபுறம் மல்லிகார்ஜீனேஸ்வரர் சன்னதி மறுபுறம் சித்தேஸ்வரர் சன்னதி உள்ளது.

கல்யாண காமாட்சி சன்னதியை 18 கோணங்களில் 18 யானைகள் தாங்கிநிற்கின்றன. ராமாயணம் முழுவதும் சிற்பவடிவில் அம்பாள் சன்னதியை சுற்றி செதுக்கப்பட்டுள்ளது.

18 படிகள் மேலேறி சென்று பரமேஸ்வரனின் நாயகி கருணை முகம் கொண்ட காமாட்சியை, கடைக்கண்ணால் வரமருளும் காருண்ய குணாசாலியை கண்ணார சேவிக்கலாம். பிரதோஷ புண்ணிய காலத்தில் அம்பிகையோடு கூடி சிவபெருமான் ஆதிசக்தி வடிவம் ஏற்று தம்மையே வலம் வரும் வகையில் அம்பாளை வலம் வருவது ஆன்மிக உலகின் அதிசயம்.

ஸ்ரீ கிருஷ்ணரின் ஆணைப்படி தர்மர் தவம் புரிந்த தலம் என்பதால் தர்மபுரி எனப் பெயர் பெற்றது. சிவஹத்தி தோஷம் நீங்க அர்ஜுனன் வழிபட்ட ஈஸ்வரன் மல்லிகார்ஜுனேஸ்வரர்.

அருள்தரும் காலச்சக்கர பைரவரும், பொருள் தரும் சூலினிராஜதுர்க்கையும் இந்த ஆலயத்தில் வீற்றிருக்கின்றனர்.

சீதையைப் பிரிந்த ஸ்ரீராமபிரான் வசந்த நவராத்திரி வழிப்பாட்டை மேற்கொண்டு இத்தல கல்யாண காமாட்சியை வழிபட்டு அவளருளுடன் சீதாதேவியை கண்டறிந்தார். எனவே காமாட்சியை பாதம் பணிந்து வேண்டிட பிரிந்த தம்பதியர் ஒன்று கூடுவர். தருமர் இங்கு தவம் செய்து இழந்த ராஜ்ஜியத்தை பெற்றார் என்று புராணங்கள் கூறுகிறது.

இவ்வாலம் தர்மபுரி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. மேலும் இவ்வாலய சிறப்புகளைப் பற்றி தெரிந்து கொள்ள இவ்வாலய அர்ச்சகரைத் தொடர்பு கொள்ள: எஸ்.செல்லமுத்துகுமாரசாமி சிவாச்சாரி, செல் 9443084116.

– ப்ரவீணாஅருண், பென்னாகரம்.
போன்: 9865791483

# மூக்குத்தியின் அவசியம்



மூக்குத்தி குத்திக் கொள்வதால் பெண்களுக்கு பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆண்களின் மூச்சுக்காற்றை விட பெண்களின் மூச்சுக்காற்றுக்கு சக்தி அதிகம்.

இதனால் பண்டைய காலத்திலேயே மூக்கு குத்திக் கொள்ளும் வழக்கம் உருவானது. மூக்கு குத்துவதினாலும் காது குத்துவதினாலும் உடலிலுள்ள வாயுக்கள் வெளியேறுகின்றன.

உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்து நீண்ட நேரம் தன்னுள்ளே வைத்திருக்கூடிய ஆற்றல் தங்கத்துக்கு இருக்கிறது. மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்த துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால் அந்த தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும்.

அதுமட்டுமல்லாமல் மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும்.

பருவ வயதை அடைந்த பெண் களுக்கு கபாலப் பகுதியில் அதாவது தலைப்பகுதியில் சிலவிதமான வாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளிக் கொண்டு வருவதற்குத்தான் மூக்குக் குத்தப்படுகிறது.

மூக்குக் குத்துவதால் பெண்கள், சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறுகள், நரம்பு சம்பந்தமான நோய்கள் மற்றும் மனத்தடுமாற்றம் போன்றவற்றில் இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்.

முன்னோர் கூறிய விஞ்ஞானத்தை நாமும் கடைபிடிப்போம்.











புத்தம் புதிய செய்திகளுடன் ஆன்மீக தேடலுக்கு அற்புதமான வழிகாட்டி

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் முந்தைய இதழ்களை விரைவில் நமது www.aanmeegamalar.com இணையதளத்தில் படித்து மகிழலாம்.


Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

# விவேகமும் வைராக்கியமும் இல்லாமல், வேதநூல்களைக் கற்பதால் எந்தப்பயனுமில்லை

- செம்பொன்னிற்கும், பித்தளைக்குமுள்ள வேறுபாடு உரைகல்லில் உரைப்பதால் தெரியவரும். அதுபோல நல்லவரையும், அல்லாதவரையும் அவரவர்களுடைய பக்தியினால் அறிய முடியும்.
- ஒருவனுக்கு உண்மைப் பக்தி தோன்றி, அவன் சாதனைகள் செய்யவிரும்பினால் பகவான் நிச்சயமாக அவனுக்குத் தகுந்த குரு ஒருவனை ஏற்படுத்துவார். அதைப்பற்றிய கவலையே வேண்டியதில்லை.
- விவேகமும் வைராக்கியமும் இல்லாமல், வேதநூல்களைக் கற்பதால் எந்தப்பயனுமில்லை.
- உலக ஆசைகளின் நடுவில் இருந்து கொண்டே சாதனைகள் செய்து மனத்தை அடக்கி ஆள்பவனே உண்மை வீரன்.
- மனிதனுடைய மனம் தராசுக்கோல் போன்றது. இந்த மனத்தராசின் இருதட்டுகளில் இரண்டு வித எடைகள் உள்ளன. உலகத்தின் மீதும், பட்டம், பெருமை இவற்றின் மீதும் உள்ள பற்று ஒன்று. மற்றொன்று அறிவு, பற்றின்மை, கடவுளிடம் அன்பு முதலியவை.
- வெட்கம், வெறுப்பு, அச்சம் இவை மூன்றும் நம்மிடம் உள்ள வரையில் நமக்கு ஈசுவர தரிசனம் கிடைக்காது.
- கடவுளை அடைவதற்குப் பாதைகள் பல உள்ளன. ஒவ்வொரு தரிசனமும் ஒரு மார்க்கமே ஆகும்.

